**தமிழ்நாடு ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மாநில திட்ட இயக்குநர், பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் சென்னை –600006.**

**நக. எண்.: 3856/ ஆ3 / கலை / ஒபக / 2023, நாள்:03.10.2023**

பொருள்: ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – கல்வி சாரா செயல்பாடுகள் – அரசு பள்ளிகளில் "**கலைத் திருவிழா போட்டிகள் 2023-24**" நடத்துதல் - வழிகாட்டும் நெறிமுறைகள் வழங்குதல் – சார்ந்து.

பார்வை: 2022-23 ஆம் ஆண்டில் சட்டமன்ற கூட்டத்தொடரில் பள்ளிக் கல்வித்துறை மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு.

************

கடந்த ஆண்டு சட்டமன்ற கூட்டத்தொடரில் பள்ளிக் கல்வித்துறை மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்கண்ட அறிவிப்பினை அறிவித்துள்ளார்.

"மாணவர்களின் கலைத் திறன்களை வெளிக்கொணரும் விதமாக அரசுப் பள்ளிகளில் பயிலும் இலட்சக்கணக்கான மாணவர்கள் பயன்பெறும் வகையில் பள்ளி, வட்டாரம், மாவட்டம் மற்றும் மாநில அளவில் கலைத் திருவிழா நடத்தப்படும்".

இதனை தொடர்ந்து 2022-23ம் ஆண்டில் 6-12 வகுப்பு அரசு பள்ளி மாணவர்களுக்கு கலைத்திருவிழா போட்டிகள் நடத்தப்பட்டு, இப்போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளும் கலையரசன், கலையரசி விருதுகளும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது. பள்ளி அளவில் சுமார் 28 லட்சம் மாணவர்களும், வட்டார அளவில் 6 லட்சம் மாணவர்களும், மாவட்ட அளவில் 1.9 லட்சம் மாணவர்களும் பல்வேறு போட்டிகளில் கலந்துகொண்டனர். மேலும் தமிழகத்தில் உள்ள பல்வேறு கலை வடிவங்களை அறிமுகப்படுத்தி, மாணவர்களின் கலைத் திறன்ளை வெளிகொணரும் விதமாகவும், பள்ளிக் கல்வி செயல்பாடுகளின் ஒரு பகுதியாக 6 முதல் 9 வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கு கலை சார்ந்த பயிற்சிகளும் கலை அரங்கம் செயல்பாடுகள் மூலம் அரசு பள்ளிகளில் வழங்கப்பட்டு வருகிறது.

**பள்ளிக் கல்வியில் கலை மற்றும் பண்பாட்டை ஒருங்கிணைத்தல்**

கலைச் செயல்பாடுகள், குழந்தைகளின் உள்ளார்ந்த திறமைகளை வெளிகொணரக்கூடிய சூழலை உருவாக்குவதோடு, பிற கற்றல் செயல்பாடுகளில் மிகவும் சுறுசுறுப்புடனும் ஆழமாகவும் ஈடுபட உதவுகிறது.. இவை குழந்தைகளின் முடிவெடுக்கும் திறனை மேம்படுத்துவதோடு மட்டுமல்லாமல் அவர்களை தன்னம்பிக்கை கொண்டவர்களாக மாற்றுகிறது. மேலும் அவர்களுக்கு பிடித்த கலையை கற்றுக் கொள்வதால், அவர்களைச் சுற்றியுள்ள உலகத்தைப் பற்றிய ஆழமான புரிதலை ஏற்படுத்துகிறது. இதனை முன்னிருத்தி இவ்வாண்டும் 6 முதல் 12 வகுப்பு மாணவர்கள் பங்கேற்கும் **கலைத் திருவிழா போட்டிகள்** அனைத்து அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், தமிழகத்தின் பாரம்பரிய கலை வடிவங்கள் மற்றும் பண்பாட்டைக் குறித்து மாணவர்கள் அறிந்து கொள்ள இச்செயல்பாடுகள் வழிவகுக்கும். எனவே, இவ்வாண்டு 2023-24ல் கலைத் திருவிழா போட்டிகள் நடத்துவதற்கான விரிவான வழிகாட்டுதல்கள் பின்வருமாறு வழங்கப்படுகிறது.

**அ. கலைத் திருவிழா போட்டிகள்-2023-24**

அனைத்து அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளிகளில் பயிலும் 6 முதல் 12 வகுப்பு மாணவர்களுக்கு பின்வரும் அட்டவணையின்படி கலைத்திருவிழா போட்டிகள் நடத்தப்பட வேண்டும்.

| வ.எண் | நிலை | கால அளவு |
|---|---|---|
| 1. | பள்ளி அளவில் | 10.10.2023, 11.10.2023,12.10.2023, 13.10.2023, 14.10.2023. |
| 2. | வட்டார அளவில் | 18.10.2023, 19.10.2023, 20.10.2023, 21.10.2023 |
| 3. | மாவட்ட அளவில் | 26.10.2023, 27.10.2023, 28.10.2023 |
| 4. | மாநில அளவில் | 21.11.2023, 22.11.2023, 23.11.2023, 24.11.2023 |

**ஆ. போட்டிகள் மற்றும் பிரிவுகள்** (category)

கலைத் திருவிழா போட்டிகள் பின்வருமாறு மூன்று பிரிவுகளில் நடத்தப்படுதல் வேண்டும்.

பிரிவு 1 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை

பிரிவு 2 9 முதல் 10 ஆம் வகுப்பு

பிரிவு 3: 11 மற்றும் 12 ஆம் வகுப்பு

இம்மூன்று பிரிவில் நடைபெறும் போட்டிகள் பள்ளி அளவில் தொடங்கி, அடுத்தடுத்த நிலைகளான வட்டாரம், மாவட்டம் மற்றும் மாநில அளவில் நடைபெறும். பள்ளி அளவில் நடைபெறும் போட்டிகளில் வெற்றி பெறும் மாணவர்கள் வட்டார அளவிலும், வட்டார அளவில் வெற்றி பெறும் மணவர்கள் மாவட்ட அளவிலும், மாவட்ட அளவில் வெற்றி பெறும் மாணவர்கள் மாநில அளவில் நடைபெறும் போட்டிகளில் பங்கேற்க செய்தல் வேண்டும்.

**இ. பரிசுகள் மற்றும் விருதுகள் 2023-24**

மாநில அளவில் போட்டிகளில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும். மேலும் கலைத் திருவிழா **தனி போட்டிகளில்** கலந்து கொண்ட மாணவ/ மாணவிகளில் அதிக போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்ற மாணவருக்கு கலையரசன் விருதும், மாணவிக்கு கலையரசி விருதும் வழங்கப்படும். இவ்விருதுகள் மூன்று பிரிவுகளிலும் தனித்தனியே வழங்கப்பட்டு மாணவர்களின் கலைத்திறன்கள் ஊக்கப்படுத்தப்படும். மாநில அளவில் வெற்றி பெறும் மாணவர்களில் தரவரிசையில் முதன்மை பெறும் 25 மாணவர்கள் வெளிநாடுகளுக்கு கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்படுவர்.

ஈ. இவ்வாண்டு 2023-24ல், கலைத்திருவிழா போட்டிகள் நடத்துதல் சார்ந்த விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

உ. **போட்டியாளர்கள் மற்றும் வெற்றியாளர்களை EMIS-ல் பதிவு செய்தல்**

பள்ளியின் EMIS வாயிலாக ஒவ்வொரு போட்டியில் பங்கு பெறும் மாணவரின் விவரங்களை போட்டி வாரியாக பள்ளி அளவில் பதிவு செய்தல் வேண்டும். போட்டிகள் முடிந்த பின்னர் தேர்வான / வெற்றி பெற்ற மாணவ, மாணவியரின் பெயரை EMIS-ல் பதிவு செய்தல் வேண்டும். இந்த மாணவரின் பெயர் அடுத்த நிலைப் போட்டிக்கு வட்டார அளவில் பார்வையிட இயலும். வட்டார அளவிலும் தேர்வான / வெற்றி பெற்ற மாணவ /மாணவியரின் பெயரை இவ்வாறே அந்த நிலையில் உள்ள பொறுப்பு அலுவலரால் EMIS - ல் உள்ளீடு செய்யப்பட வேண்டும். இவ்வாறே மாவட்ட அளவில் போட்டிகள் நடத்தப்பட்டு போட்டி வாரியாக தேர்வான மாணவ / மாணவியரின் பெயரும் முதன்னை கல்வி அலுவலரின் EMIS Login வழியாக உள்ளீடு செய்யப்பட வேண்டும். இந்த மாணவரின் பெயர்களே மாநில அளவிலான போட்டிக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

| வ. எண் | நிலை | பொறுப்பாளர் | EMIS–ல் பதிவேற்றம் செய்வதற்கான கால அளவு |
|---|---|---|---|
| 1. | பள்ளி அளவில் | 1. கணினி விவரமறிந்த சார்ந்த பள்ளி ஆசிரியர்– அரசு உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் அரசு மேல்நிலைப் பள்ளிகள்<br>2. வட்டார வளமைய ஆசிரியர் பயிற்றுநர்கள் – நடுநிலைப் பள்ளிகள். | I. போட்டி வாரியாக பங்கேற்பாளர் விவரங்கள் பதிவேற்றம் – 09.10.2023க்குள்<br>II. போட்டி வாரியாக வெற்றியாளர்கள் விவரங்கள் பதிவேற்றம் செய்தல்– 15.10.2023க்குள் |
| 2. | வட்டார அளவில் | வட்டார வளமைய அசிரியர் பயிற்றுநர்கள் – Art &culture & EMIS | 22.10.2023க்குள் |
| 3. | மாவட்ட அளவில் | I. மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள்– Art & Culture. EMIS<br>II.வகைபடுத்துநர் Programmer | 30.10.2023க்குள் |
| 4. | மாநில அளவில் | I. மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள்– Art & Culture. EMIS<br>II.வகைபடுத்துநர் Programmer | 29.11.2023க்குள் |

மேற்காணும் கலைத்திருவிழா போட்டிகள் நடத்துவதற்கான வழிகாட்டும் நெறிமுறைகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அனைத்து வகை அரசுப் பள்ளிகளிலும் கலைத் திருவிழா போட்டிகளில் பெருமளவு மாணவர்களின் பங்கேற்பினை உறுதி செய்ய வேண்டுமாய்அனத்து பள்ளி தலைமையாசிரியர்களுக்கும் அறிவுறுத்த அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். ஆய்வு அலுவலர்கள் அதனை உறுதிப்படுத்த வேண்டும்.

**இணைப்பு :**

கலைத்திருவிழா போட்டிகள் நடத்துவதற்கான வழிகாட்டும் நெறிமுறைகள்

| | | |
|---|---|---|
| **இயக்குநர்** | **இயக்குநர்** | **மாநில திட்ட இயக்குநர்** |
| **தொடக்க கல்வி** | **பள்ளிக் கல்வி** | **ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி** |

**பெறுநர்:**

1. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்
2. அனைத்து மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்கள்.
3. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்
   (இடைநிலைக்கல்வி / தொடக்கக்கல்வி)
4. அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள்

(வ.எண்; 2, 3, 4 முதன்மைக் கல்வி அலுவலர் வாயிலாக)

**நகல்:**

1. அரசு முதன்மைச் செயலாளர், பள்ளிக்கல்வித் துறை, சென்னை – 9.
2. இயக்குநர், பள்ளிக்கல்வி, சென்னை – 6.
3. இயக்குநர், தொடக்கக்கல்வி இயக்ககம், சென்னை – 6.
4. இயக்குநர், மாநில கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை – 6.

## பள்ளிக் கல்வித்துறை

## கலைத் திருவிழா 2023-24

## I. போட்டிகள் நடத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள்

1.01. தமிழ்நாட்டில் பள்ளிக் கல்வித்துறையின் கீழ் இயங்கி வரும் அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவ/ மாணவிகளும் பங்கேற்கும் வகையிலான கலை நிகழ்ச்சிகள் "கலைத் திருவிழா" என்னும் பெயரில் நடைபெற உள்ளது.

1.02. கலைத் திருவிழாப் போட்டிகள் பின்வருமாறு 3 பிரிவில் (Category) நடத்தப் பெறுதல் வேண்டும்.

பிரிவு 1: 6 முதல் 8 ஆம் வகுப்பு

பிரிவு 2: 9 முதல் 10 ஆம் வகுப்பு

பிரிவு 3: 11 மற்றும் 12 ஆம் வகுப்பு

1.03. இம்மூன்று பிரிவில் நடைபெறும் போட்டிகள் பள்ளி நிலையில் தொடங்கி, அடுத்தடுத்த நிலைகளான வட்டார, மாவட்ட மற்றும் மாநில அளவிலான நிலைகளில் நடைபெறும்.

1.04. பள்ளி அளவில் நடத்தப்பெறும் போட்டிகளில் முதல் தகுதி பெறும் ஒருவர் / ஒரு குழு மட்டுமே வட்டார அளவில் நடைபெறும் போட்டியில் பங்கு பெற தகுதி பெறுவர்.

வட்டார அளவில் நடைபெறும் போட்டிகளில் முதல் இரு தகுதிகளை பெறும் தனிநபர் / குழுக்கள் மட்டுமே மாவட்ட அளவிலான போட்டிகளில் பங்கேற்பர்.

மாவட்ட அளவில் நடைபெறும் போட்டிகளில் முதல் தகுதியை பெறும் தனிநபர் / குழு மாநில அளவில் நடைபெறும் போட்டிகளில் பங்கேற்பர்.

1.05. கடந்த ஆண்டு நடைப்பெற்ற கலைத்திருவிழா போட்டிகளில் கலந்து கொண்டு மாநில அளவில் வெற்றி பெற்ற மாணவர்கள்இவ்வாண்டு அதே போட்டியில் பங்குபெற இயலாது.

1.06. ஒரு நிலையில் தேர்வு பெற்ற அணியின் விவரங்களை பள்ளிக் கல்வித்துறை வடிவமைத்திருக்கும் EMIS Portal (மென்பொருள்) -ல் உள்ள படிவத்தில் உள்ளீடு செய்து அடுத்தடுத்த நிலை போட்டிகளுக்கு அனுப்ப வேண்டும். இது அந்தந்த நிலைகளின் தலைமை அமைப்பாளரின் பொறுப்பாகும்.

1.07. போட்டி முடிவுகள் குறித்து அதற்கான நடுவர்களின் முடிவே இறுதியானது.

## II . பிரிவு 1 இல் நடத்தப்படும் போட்டிகள்

**(6 முதல் 8 ஆம் வகுப்பு வரை)**

2.01. தமிழ்நாட்டில் இயங்கும் அனைத்து வகை அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலும் 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர் இப்போட்டிகளில் பங்குபெறலாம்.

2.02. பள்ளி அளவில் நடத்தப்பெறும் போட்டிகளில் முதல் தகுதி பெறும் தனிநபர் / குழு மட்டுமே வட்டார அளவில் நடைபெறும் போட்டியில் பங்கு பெற தகுதி பெறுவர். வட்டார அளவில் நடைபெறும் போட்டிகளில் முதல் இரு தகுதிகளை பெறும் தனிநபர் / குழுக்கள் மட்டுமே மாவட்ட அளவிலான போட்டிகளில பங்கேற்பர். மாவட்ட அளவில் நடைபெறும் போட்டிகளில் முதல் தகுதியை பெறும் தனிநபர் / குழு மாநில அளவில் நடைபெறும் போட்டிகளில் பங்கேற்பர்.

2.03. போட்டிக்கான கலை இனங்கள் கீழ்வருமாறு 6 வகையாக கொடுக்கப்பட்டுள்ளன.

**வகை – 1: கவின்கலை / நுண்கலை**

| வ.எண் | இனம் | நேரம் |
|---|---|---|
| 1. | ஓவியம் வரைதல் | 30 மணித்துளிகள் |
| 2. | வரைந்து வண்ணம் தீட்டுதல் | 45 மணித்துளிகள் |
| 3. | அழகு கையெழுத்து – தமிழ் | 15 மணித்துளிகள் |
| 4. | அழகு கையெழுத்து – ஆங்கிலம் | 10 மணித்துளிகள் |
| 5. | மனத்தில் பதிந்த இயற்கைக் காட்சியை வரைதல் | 90 மணித்துளிகள் |
| 6. | களிமண் சுதை வேலைப்பாடு | 120 மணித்துளிகள் |
| 7. | செதுக்குச் சிற்பம் (காய்கறி / சோப்பு / மெழுகு / சுண்ணக்கட்டி போன்ற பிற பொருள்கள்) | 120 மணித்துளிகள் |

**வகை – 2: இசை (வாய்ப்பாட்டு)**

| வ.எண் | இனம் | நேரம் |
|---|---|---|
| 1. | மெல்லிசை – தனிப்பாட்டு | 5 மணித்துளிகள் |
| 2. | செவ்வியல் இசை – தனிப்பாட்டு | 10 மணித்துளிகள் |
| 3. | நாட்டுப்புற பாடல் | 10 மணித்துளிகள் |
| 4. | வில்லுப்பாட்டு (1 + 4 பேர்) | 20 மணித்துளிகள் |

**வகை – 3: கருவி இசை**

| வ.எண் | இனம் | நேரம் |
|---|---|---|
| 1. | வாத்தியக் கருவிகள் (தோல் கருவி) | 10 மணித்துளிகள் |
| 2. | வாத்தியக் கருவிகள் (கம்பிக் கருவி) | 10 மணித்துளிகள் |
| 3. | வாத்தியக் கருவிகள் (காற்றுக் கருவி) | 10 மணித்துளிகள் |

**வகை – 4: நடனம்**

| வ.எண் | இனம் | நேரம் |
|---|---|---|
| 1. | கும்மி நடனம் (4 – 9 பேர்) | 10 மணித்துளிகள் |
| 2. | தனி நடனம் | 10 மணித்துளிகள் |
| 3. | கிராமிய நடனம் (4 – 9 பேர்) | 10 மணித்துளிகள் |
| 4. | செவ்வியல் நடனம் – தனியொருவர் | 10 மணித்துளிகள் |
| 5. | செவ்வியல் நடனம் – (குழு 4 – 9 பேர்) | 10 மணித்துளிகள் |

**வகை – 5: நாடகம்**

| வ.எண் | இனம் | பரிந்துரைக்கப்படும் தலைப்புகள் | நேரம் |
|---|---|---|---|
| 1. | நாடகம் (10 பேர்) | 1. எல்லாரும் ஓரினம><br>2. நீரின்றி அமையாது உலகு<br>3. வேற்றுமையில் ஒற்றுமை<br>4. மனதில் உறுதி இருந்தால்<br>5. சாலை பாதுகாப்பு | 30 மணித்துளிகள் |
| 2. | தனி நபர் நடிப்பு | | 10 மணித்துளிகள் |
| 3. | நகைச்சுவை வழங்குதல் | | 10 மணித்துளிகள் |
| 4. | பலகுரல் பேச்சு | | 10 மணித்துளிகள் |

**வகை – 6: மொழித்திறன்**

| வ.எண் | இனம் | பரிந்துரைக்கப்படும் தலைப்புகள் | நேரம் |
|---|---|---|---|
| 1. | கதை எழுதுதல் (தமிழ்) | | 90 மணித்துளிகள் |
| 2. | கதை எழுதுதல் (ஆங்கிலம்) | | 90 மணித்துளிகள் |
| 3. | கவிதை புனைதல் | | 90 மணித்துளிகள் |
| 4. | பேச்சு போட்டி (தமிழ்) | அறிவே அழகு | 5 மணித்துளிகள் |
| 5. | பேச்சு போட்டி (ஆங்கிலம்) | Knowledge is power | 5 மணித்துளிகள் |
| 6. | திருக்குறள் ஒப்பித்தல் | 1. அறிவுடைமை<br>2. வான்சிறப்பு | 5 மணித்துளிகள் |
| 7. | Recitation English – Poem | | 5 மணித்துளிகள் |
| 8. | கதை சொல்லுதல் | | 10 மணித்துளிகள் |
| 9. | கட்டுரைப் போட்டி– தமிழ் | எங்கள் பள்ளி மிளிரும் பள்ளி – பள்ளித் தூய்மை பிரசாரம் | 60 மணித்துளிகள் |
| 10. | கட்டுரைப் போட்டி – ஆங்கிலம் | Engal palli milirum palli –Cleanliness campaign in my school | 60 மணித்துளிகள் |

*குறிப்பு: மெல்லிசை – இனிய மெட்டுகளில் அமைந்த இரசனைக்குரிய பாடல்களைப் பாடுதல், ஆசிரியரால் அனுமதிக்கப்படும் திரைப்படப் பாடல்கள் இடம் பெறலாம்.*

2.04. பள்ளி நிலையில் இனம் ஒன்றிற்கு ஒருவர் / ஒரு குழு என வட்டார அளவிலான போட்டியில் பங்கு பெறத் தகுதி பெறுவர்.

2.05. ஒருவர் எவையேனும் 3 தனிப் போட்டி மற்றும் இரண்டு குழுப் போட்டியில் மட்டுமே பங்குபெற முடியும்.

## III. பிரிவு 2 இல் நடத்தப்படும் போட்டிகள்

**(9 முதல் 10 ஆம் வகுப்புள்)**

3.01. தமிழ்நாட்டில் இயங்கும் அனைத்து வகை அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலும் 9 மற்றும் 10 ஆம் வகுப்பில் பயிலும் மாணவ, மாணவியர் இப்போட்டிகளில் பங்குபெறுவர்.

3.02. பிரிவு 2 அளவிலான போட்டிகள் பள்ளி, வட்டாரம், மாவட்டம் மற்றும் மாநிலம் என நான்கு நிலையிலும் நடத்தப்படும்.

3.03. போட்டிக்கான கலை இனங்கள் கீழ்வருமாறு 9 வகையாக கொடுக்கப்பட்டுள்ளன.

**வகை – 1: கவின்கலை / நுண்கலை**

| வ.எண் | இனம் | பரிந்துரைக்கப்படும் தலைப்புகள் | நேரம் |
|---|---|---|---|
| 1. | தலைப்பை ஒட்டி வரைதல் | 1. உங்கள் பார்வையில் சமத்துவம் என்றால்<br>2. குழந்தை தொழிலாளர் முறையை ஒழிப்போம் | 120 மணித்துளிகள் |
| 2. | எதிர்காலக் கனவை வரைதல் | 1. கனவு மெய்ப்பட வேண்டும்<br>2. வருங்கால இந்தியா | 120 மணித்துளிகள் |
| 3. | நவீன ஓவியம் (Modern Art) | சமூக மாற்றங்கள் | 120 மணித்துளிகள் |
| 4. | கார்ட்டூன் – கேலிச்சித்திரம் வரைதல் | சுற்றுச்சூழல் பாதுகாப்பு | 60 மணித்துளிகள் |
| 5. | பானை ஓவியம் | | 60 மணித்துளிகள் |
| 6. | களிமண் சிற்பம் | | 60 மணித்துளிகள் |
| 7. | மணல் சிற்பம் | | 60 மணித்துளிகள் |
| 8. | காகிதக்கூழ் பொருள்கள் | | 60 மணித்துளிகள் |

| | | | |
|---|---|---|---|
| 9. | செதுக்குச் சிற்பம் (காய்கறி / சோப்பு / மெழுகு / சுண்ணக்கட்டி போன்ற பிற பொருள்கள்) | | 120 மணித்துளிகள் |
| 10. | புகைப்படம் எடுத்தல் (Photography) | | 120 மணித்துளிகள் |
| 11. | Digital Art | | 120 மணித்துளிகள் |

**வகை – 2: இசை (வாய்ப்பாட்டு)**

| வ.எண் | இனம் | நேரம் |
|---|---|---|
| 1. | நாட்டுப்புற பாடல் | 5 மணித்துளிகள் |
| 2. | வில்லுப்பாட்டு (1 + 4 பேர்) | 10 மணித்துளிகள் |
| 3. | மெல்லிசை | 5 மணித்துளிகள் |
| 4. | கொன்னக்கோல் | 10 மணித்துளிகள் |
| 5. | செவ்வியல் இசை | 10 மணித்துளிகள் |

*குறிப்பு : மெல்லிசை – இனிய மெட்டுகளில் அமைந்த ரசனைக்குரிய பாடல்களைப் பாடுதல், ஆசிரியரால் அனுமதிக்கப்படும் திரைப்படப் பாடல்கள் இடம் பெறலாம்.*

**வகை – 3: கருவி இசை – தோற் கருவி**

| வ.எண் | இனம் | நேரம் |
|---|---|---|
| 1. | பம்பை / உருமி / உடுக்கை | 10 மணித்துளிகள் |
| 2. | பறை | 10 மணித்துளிகள் |
| 3. | மிருதங்கம் / கஞ்சிரா / கடம் | 10 மணித்துளிகள் |
| 4. | தபேலா | 10 மணித்துளிகள் |
| 5. | தவில் | 10 மணித்துளிகள் |
| 6. | டிரம்ஸ் (Triple Drum / Drums) | 15 மணித்துளிகள் |
| 7. | செண்டை மேளம் (Chenda) | 10 மணித்துளிகள் |

**வகை – 4: கருவி இசை – துளை – காற்றுக் கருவிகள்**

| வ.எண் | இனம் | நேரம் |
|---|---|---|
| 1. | நாதஸ்வரம் | 10 மணித்துளிகள் |

| | | |
|---|---|---|
| 2. | புல்லாங்குழல் | 10 மணித்துளிகள் |
| 3. | கிளாரினெட் (Clarinet) | 10 மணித்துளிகள் |
| 4. | ஹார்மோனியம் (Harmonium) | 10 மணித்துளிகள் |
| 5. | சாக்ஸ போன் (Saxaphone) | 10 மணித்துளிகள் |
| 6. | கோண கொம்பு (Kona Kombu) | 10 மணித்துளிகள் |
| 7. | ஜலதரங்கம் (Jalatharangam) | 10 மணித்துளிகள் |
| 8. | கீ போர்டு (Keyboard) | 10 மணித்துளிகள் |
| 9. | மவுத் ஆர்கான் (Mouth Organ) | 10 மணித்துளிகள் |

**வகை – 5: கருவி இசை – தந்திக் கருவிகள்**

| வ.எண் | இனம் | நேரம் |
|---|---|---|
| 1. | புல்புல்தாரா | 10 மணித்துளிகள் |
| 2. | வயலின் | 10 மணித்துளிகள் |
| 3. | வீணை / விசித்திர வீணை அல்லது கோட்டு வாத்தியம் | 10 மணித்துளிகள் |
| 4. | கிட்டார் (Guitar) | 10 மணித்துளிகள் |
| 5. | மாண்டலின் (Mandolin) | 10 மணித்துளிகள் |
| 6. | மொர்சிங் (Morsing) | 10 மணித்துளிகள் |

**வகை – 6: இசைச் சங்கமம்**

| வ.எண் | இனம் | நேரம் |
|---|---|---|
| 1. | நாத சங்கமம் (வாத்திய இசை) | 20 மணித்துளிகள் |
| 2.. | இசைக்குழு (Orchestra) 9 பேர் | 20 மணித்துளிகள் |

**வகை – 7: நடனம்**

| வ.எண் | இனம் | நேரம் |
|---|---|---|
| 1. | நாட்டுப்புற நடனம் – தனி | 10 மணித்துளிகள் |
| 2. | நாட்டுப்புற நடனம் (4 – 9 பேர்) | 10 மணித்துளிகள் |
| 3. | கரகாட்டம் (குழு) | 10 மணித்துளிகள் |
| 4. | கணியன் கூத்து (குழு) | 10 மணித்துளிகள் |
| 5. | ஒயிலாட்டம் (குழு) | 10 மணித்துளிகள் |
| 6. | தேவராட்டம் (குழு) | 10 மணித்துளிகள் |
| 7. | கோலாட்டம் (குழு) | 10 மணித்துளிகள் |

| | | |
|---|---|---|
| 8. | பொம்மலாட்டம் (தோற்பாவை, மரப்பாவை, நிழற்பாவை) | 30 மணித்துளிகள் |
| 9. | செவ்வியல் நடனம் | 10 மணித்துளிகள் |
| 10. | செவ்வியல் நடனம் – குழு (4 –9 பேர்) | 10 மணித்துளிகள் |
| 11. | பிற மாநில நாட்டியம் – தனி | 10 மணித்துளிகள் |
| 12. | பிற மாநில நாட்டியம் – குழு | 10 மணித்துளிகள் |
| 13. | மேற்கத்திய நடனம்– தனி | 10 மணித்துளிகள் |
| 14. | மேற்கத்திய நடனம் குழு | 10 மணித்துளிகள் |
| 15. | பிறவகை நடனம் (free style) – தனி | 10 மணித்துளிகள் |
| 16. | பிறவகை நடனம் (free style) – குழு (4 –9 பேர்) | 10 மணித்துளிகள் |

**வகை – 8: நாடகம்**

| வ.எண் | இனம் | பரிந்துரைக்கப்படும் தலைப்புகள் | நேரம் |
|---|---|---|---|
| 1. | தெருக்கூத்து – 10 பேர் | 1. மக்களிடத்தில் சமூக ஊடகங்களின் தாக்கம்<br>2. கலைகளால் இணையட்டும் கரங்கள்<br>3. பள்ளி மேலாண்மையில் சமூகத்தின் பங்கு<br>4. ஒன்று பட்டால் உண்டு வாழ்வு<br>5. எது அறம்? | 30 மணித்துளிகள் |
| 2. | வீதி நாடகம் – 10 பேர் | | 30 மணித்துளிகள் |
| 3. | தனிநபர் நடிப்பு | | 15 மணித்துளிகள் |
| 4. | பல குரல் பேச்சு(Mimicry) | | 10 மணித்துளிகள் |
| 5. | இலக்கிய நாடகம் – 10 பேர் | | 30 மணித்துளிகள் |
| 6. | பாவனை நடிப்பு (Miming) 4 – 9 பேர் குழு | | 20 மணித்துளிகள் |
| 7. | பாவனை நடிப்பு (Miming) தனி | | 10 மணித்துளிகள் |

**வகை – 9: மொழித்திறன்**

| வ.எண் | இனம் | பரிந்துரைக்கப்படும் தலைப்புகள் | நேரம் |
|---|---|---|---|
| 1. | பேச்சுப்போட்டி – தமிழ் | சமத்துவமே மகத்துவம்! | 7 மணித்துளிகள் |
| 2. | பேச்சுப்போட்டி – (ஆங்கிலம்) On already given topic | The significance of equality | 7 மணித்துளிகள் |
| 3. | திருக்குறள் ஒப்பு வித்தல்(அதிகாரம் வாரியாக) | 1. செய் நன்றி அறிதல்<br>2. ஒழுக்கமுடைமை<br>3. பெருமை | 10 மணித்துளிகள் |
| 4. | கதை எழுதுதல் – தமிழ் | | 90 மணித்துளிகள் |
| 5. | கட்டுரை போட்டி – தமிழ் | அறிவைத் திறக்கும் நூலகம் | 90 மணித்துளிகள் |
| 6. | கட்டுரை போட்டி(ஆங்கிலம்) On already given topic | Who is a good citizen? | 90 மணித்துளிகள் |
| 7. | கவிதை புனைதல் – தமிழ் | | 90 மணித்துளிகள் |
| 8. | பாடல் ஒப்புவித்தல் – தமிழ் | | 10 மணித்துளிகள் |
| 9. | Poem Recitation English | | 10 மணித்துளிகள் |
| 10. | விவாதம் மேடை அதிகபட்சம் 5 பேர் கொடுக்கப்படும் தலைப்பு சார்ந்து விவாதித்தல் | செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) நன்றா? தீதா? | 30 மணித்துளிகள் |
| 11. | இணைய கருத்துருவாக்கம் (Digital content Development) | உனக்கு பிடித்த வரலாற்று சின்னத்தைப் பற்றிய தகவல் உருவாக்கம். | 60 மணித்துளிகள் |

**3.04.** பள்ளி அளவில் ஒவ்வொரு போட்டியிலும் முதலிடம் பிடிக்கும் ஒருவர் அல்லது ஒரு குழு என வட்டார அளவிலான போட்டியில் பங்குபெற தகுதி பெறுவர்.

**3.05.**ஒருவர், எவையேனும் மூன்று தனிநபர் போட்டி மற்றும் இரண்டு குழுப் போட்டிகளில் மட்டுமே அதிகபட்சமாக பங்குபெற முடியும்.

## IV. பிரிவு 3 இல் நடத்தப்படும் போட்டிகள்

### (11 முதல் 12 ஆம் வகுப்புகள்)

4.01. அரசு மேல்நிலைப் பள்ளிகளில் 11 மற்றும் 12 ஆம் வகுப்பில் படிக்கும் மாணவ / மாணவியர் இப்போட்டிகளில் பங்கு பெறலாம்.

4.02. **பள்ளி** , வட்டாரம், மாவட்டம் மற்றும் மாநில அளவில் பிரிவு 3–ல் குறிப்பிடப்பெறும் போட்டிகள் நடத்தப்பட வேண்டும்.

4.03. போட்டிக்கான கலை இனங்கள் கீழ்வருமாறு 9 வகையாக கொடுக்கப்பட்டுள்ளன.

**வகை – 1: காண்கலை / நுண்கலை**

| வ.எண் | இனம் | பரிந்துரைக்கப்படும் தலைப்புகள் | நேரம் |
|---|---|---|---|
| 1. | தலைப்பை ஒட்டி வரைதல் | 1. சாதியற்ற சமூகம்<br>2. உன் பர்வையில் உலகம் | 120 மணித்துளிகள் |
| 2. | எதிர்காலக் கனவை வரைதல் | 1. வளங்குன்றா வளர்ச்சி (Sustainable Development)<br>2. என் விண்வெளி பயணம்<br>3. உனக்கு சிறகுகள் இருந்தால் | 120 மணித்துளிகள் |
| 3. | கேலிச் சித்திரம் (Cartoon) | வாக்குரிமை | 120 மணித்துளிகள் |
| 4. | நவீன ஓவியம் (Modern Art) | பாலின சமத்துவம் | 120 மணித்துளிகள் |
| 5. | காகித வேலை – கொலாஜ் | | 120 மணித்துளிகள் |
| 6. | களிமண் சிற்பம் | | 120 மணித்துளிகள் |

| | | | |
|---|---|---|---|
| 7. | மணல் சிற்பம் | | 120 மணித்துளிகள் |
| 8. | காகிதக்கூழ் பொருள்ள் | | 120 மணித்துளிகள் |
| 9. | செதுக்குச் சிற்பம் (காய்கறி / சோப்பு / மெழுகு / சுண்ணக்கட்டி போன்ற பிற பொருள்கள்) | | 120 மணித்துளிகள் |
| 10. | புகைப்படம் எடுத்தல் (Photography) | | 120 மணித்துளிகள் |
| 11. | Digital Art | | 120 மணித்துளிகள் |

**வகை – 2: இசை (வாய்ப்பாட்டு)**

| வ.எண் | இனம் | நேரம் |
|---|---|---|
| 1. | நாட்டுப்புறப்பாட்டு | 5 மணித்துளிகள் |
| 2. | மெல்லிசை | 5 மணித்துளிகள் |
| 3. | செவ்வியல் இசை – வாய்ப்பாட்டு | 10 மணித்துளிகள் |

**வகை – 3: கருவி இசை – தோற் கருவி**

| வ.எண் | இனம் | நேரம் |
|---|---|---|
| 1. | பறை | 10 மணித்துளிகள் |
| 2. | முரசு | 10 மணித்துளிகள் |
| 3. | தவண்டை | 10 மணித்துளிகள் |
| 4. | தக்கை | 10 மணித்துளிகள் |
| 5. | பம்பை / உருமி / உடுக்கை | 10 மணித்துளிகள் |
| 6. | தவில் | 10 மணித்துளிகள் |
| 7. | தபேலா | 10 மணித்துளிகள் |
| 8. | மிருதங்கம் | 10 மணித்துளிகள் |
| 9. | டிரம்ஸ் (Triple Drum / Drums) | 10 மணித்துளிகள் |
| 10. | செண்டை மேளம் (Chenda) | 10 மணித்துளிகள் |

**வகை – 4: கருவி இசை – துளை – காற்றுக் கருவிகள்**

| வ.எண் | இனம் | நேரம் |
|---|---|---|
| 1. | கொக்கரை | 10 மணித்துளிகள் |
| 2. | நெடுந்தாரை | 10 மணித்துளிகள் |
| 3. | எக்காளம் | 10 மணித்துளிகள் |
| 4. | கொம்புத்தாரை | 10 மணித்துளிகள் |
| 5. | திருச்சின்னம் | 10 மணித்துளிகள் |
| 6. | துத்தேரி | 10 மணித்துளிகள் |
| 7. | புல்லாங்குழல் | 10 மணித்துளிகள் |
| 8. | நாதஸ்வரம் | 10 மணித்துளிகள் |
| 9. | கிளாரினெட் | 10 மணித்துளிகள் |
| 10. | சாக்ஸோ போன்(Saxaphone) | 10 மணித்துளிகள் |
| 11. | ஹார்மோனியம் (Harmonium) | 10 மணித்துளிகள் |
| 12. | கோண கொம்பு (Kona Kombu) | 10 மணித்துளிகள் |
| 13. | ஜலதரங்கம்(Jalatharangam) | 10 மணித்துளிகள் |
| 14. | கீபோர்டு (Keyboard) | 10 மணித்துளிகள் |

**வகை – 5: கருவி இசை – தந்திக் கருவிகள்**

| வ.எண் | இனம் | நேரம் |
|---|---|---|
| 1. | புல்புல்தாரா | 10 மணித்துளிகள் |
| 2. | வயலின் | 10 மணித்துளிகள் |
| 3. | வீணை / விசித்திர வீணை அல்லது கோட்டு வாத்தியம் | 10 மணித்துளிகள் |
| 4. | கிட்டார் (Guitar) | 10 மணித்துளிகள் |
| 5. | மண்டோலின் (Mandolin) | 10 மணித்துளிகள் |
| 6. | மோர்சிங் (Morsing) | 10 மணித்துளிகள் |

**வகை – 6: இசைச் சங்கமம்**

| வ.எண் | இனம் | நேரம் |
|---|---|---|
| 1. | நாத சங்கமம் – வாத்திய இசை (குழு) | 10 மணித்துளிகள் |
| 2. | இசைக்குழு (Orchestra) குழு 9 பேர் | 20 மணித்துளிகள் |

**வகை – 7: நடனம்**

| வ.எண் | இனம் | நேரம் |
|---|---|---|
| 1. | கணியன் கூத்து (குழு) (4 – 9 பேர்) | 10 மணித்துளிகள் |
| 2. | கரகாட்டம் (குழு – 4 – 9 பேர்) | 10 மணித்துளிகள் |
| 3. | ஒயிலாட்டம் (குழு 4 – 9 பேர்) | 10 மணித்துளிகள் |
| 4. | தேவராட்டம் (குழு 4 – 9 பேர்) | 10 மணித்துளிகள் |
| 5. | கோலாட்டம் (குழு 4 – 9 பேர்) | 10 மணித்துளிகள் |
| 6. | பொம்மலாட்டம் (தோற்பாவை, மரப்பாவை, நிழற்பாவை) | 30 மணித்துளிகள் |
| 7. | நாட்டுப்புற நடனம் – தனி | 10 மணித்துளிகள் |
| 8. | நாட்டுப்புற நடனம் – (4 – 9 பேர்) | 30 மணித்துளிகள் |
| 9. | செவ்வியல் நடனம் | 10 மணித்துளிகள் |
| 10. | செவ்வியல் நடனம் – குழு | 10 மணித்துளிகள் |
| 11. | பிற மாநில நாட்டியம் – தனி | 10 மணித்துளிகள் |
| 12. | பிற மாநில நாட்டியம் – குழு | 10 மணித்துளிகள் |
| 13. | மேற்கத்திய நடனம் – தனி | 10 மணித்துளிகள் |
| 14. | மேற்கத்திய நடனம் குழு | 10 மணித்துளிகள் |
| 15. | பிறவகை நடனம் (free style) – தனி | 10 மணித்துளிகள் |
| 16. | பிறவகை நடனம் (free style) – குழு நடனம் | 10 மணித்துளிகள் |

**வகை – 8: நாடகம்**

| வ.எண் | இனம் | பரிந்துரைக்கப்படும் தலைப்புகள் | நேரம் |
|---|---|---|---|
| 1. | தெருக்கூத்து – 10 பேர் | 1. குழந்தை தொழிலாளர்கள்<br>2. மனித நேயம் மலரட்டும்<br>3. கல்வி என் பிறப்புரிமை<br>4. மதசார்பின்மை | 30 மணித்துளிகள் |
| 2. | வீதி நாடகம் – 10 பேர் | | 30 மணித்துளிகள் |
| 3. | தனிநபர் நடிப்பு | | 15 மணித்துளிகள் |
| 4. | பல குரல் பேச்சு(Mimicry) | | 10 மணித்துளிகள் |

| | | | |
|---|---|---|---|
| 5. | இலக்கிய நாடகம் – 10 பேர் | | 30 மணித்துளிகள் |
| 6. | பாவனை நடிப்பு (Miming) 4 – 9 பேர் குழு | | 20 மணித்துளிகள் |
| 7. | பாவனை நடிப்பு (Miming) தனி | | 10 மணித்துளிகள் |

**வகை – 9: மொழித்திறன்**

| வ.எண் | இனம் | பரிந்துரைக்கப்படும் தலைப்புகள் | நேரம் |
|---|---|---|---|
| 1. | பேச்சுப்போட்டி – தமிழ் | கடமை;கண்ணியம்;கட்டுப்பாடு | 7 மணித்துளிகள் |
| 2. | பேச்சுப்போட்டி – (ஆங்கிலம்) On already given topic | Duty;Dignity;Discipline | 7 மணித்துளிகள் |
| 3. | திருக்குறள் ஒப்பு வித்தல்(அதிகாரம் வாரியாக) | 1. இன்னா செய்யாமை<br>2. கல்வி<br>3. குற்றங்கடிதல்<br>4. காலமறிதல்<br>5. செங்கோன்மை<br>6. ஊக்கமுடைமை<br>7. பண்புடைமை<br>8. நாணுடைமை | 10 மணித்துளிகள் |
| 4. | கதை எழுதுதல் – தமிழ் | | 90 மணித்துளிகள் |
| 5. | கட்டுரை போட்டி – தமிழ் | உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் | 90 மணித்துளிகள் |
| 6. | கட்டுரை போட்டி(ஆங்கிலம்) On already given topic | Inclusivity and Plurality are the hallmarks of a progressive Society. | 90 மணித்துளிகள் |

| | | | |
|---|---|---|---|
| 7. | கவிதை புனைதல் – தமிழ் | | 90 மணித்துளிகள் |
| 8. | பாடல் ஒப்புவித்தல் –தமிழ் | | 10 மணித்துளிகள் |
| 9. | Poem Recitation English | | 10 மணித்துளிகள் |
| 10. | பிற மாநில மொழிகள் - கவிதை சொல்லுதல் | | 10 மணித்துளிகள் |
| 11. | விவாத மேடை (அதிகபட்சம் 5 பேர் கொடுக்கப்படும் தலைப்பு சார்ந்து விவாதித்தல் | மக்களைக் காப்பது சட்டமே திட்டமே. | 30 மணித்துளிகள் |
| 12. | இணைய கருத்துருவாக்கம் (Digital Content Development) | நீ சென்ற தொன்ம இடங்கள் குறித்து பயணக்கட்டுரை வரைக. | 60 மணித்துளிகள் |

4.04. பள்ளி அளவில் ஒவ்வொரு போட்டியிலும் முதலிடம் பிடிக்கும் ஒருவர் அல்லது ஒரு குழு என வட்டார அளவிலான போட்டியில் பங்குபெற தகுதி பெறுவர்.

4.05. ஒருவர் ஏதேனும் மூன்று தனி போட்டி மற்றும் 2 குழு போட்டியில் மட்டுமே அதிக பட்சமாக பங்கு பெற முடியும்

## V. பள்ளி அளவில் கலைத்திருவிழா போட்டிகளை நடத்துதல் சார்ந்த விதிமுறைகள்

5.01. பள்ளி, வட்டார, மாவட்ட மற்றும் மாநில அளவிலான போட்டிகள், பள்ளி கல்வித்துறையின் ஆணைக்கிணங்க நடத்தப்படுதல் வேண்டும். இதில் பரவலாக அனைத்து போட்டிகளிலும் பெரும்பான்மையான மாணவர்களை ஊக்கப்படுத்தி பங்கு பெறச்செய்தல் வேண்டும்.

5.02. கலைத்திருவிழா ஒரு பொது நிகழ்ச்சியாக நடத்தப்பட வேண்டும். கலை விழா நிகழ்ச்சிகளை நடத்துவதற்கும், நிருவாகம் செய்வதற்கும் பள்ளியளவில் குழு ஒன்றினை அமைக்க வேண்டும். இக்குழுவில் ஆசிரியர், பெற்றோர், மாணவர், கலையார்வலர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், பள்ளித் தலைமையாசிரியர் ஆகியோர் இடம் பெறுவர்.

5.03. போட்டியில் பங்குபெறுவதற்குக் கட்டணம் ஏதுமில்லை

5.04. போட்டிகளில் நடுவர்களாக பணிபுரிய உரிய கலை பிரிவின் வல்லுநர்களைக் கண்டறிந்து பள்ளியின் தலைமை ஆசிரியர், விழா அமைப்புக் குழுவினரிடம் கலந்து ஆலோசித்து நடுவர் பட்டியல் ஒன்று தயார் செய்து அதன் முன் அனுமதியை வட்டாரக் கல்வி அலுவலரிடமிருந்து பெற வேண்டும். இந்த பட்டியலில் இருந்து தான் நடுவர்கள் நியமிக்கப்படுதல் வேண்டும்.

5.05. ஒவ்வொரு போட்டியிலும் முதலிடம் பெற்ற மாணவனை / குழுவினை மட்டுமே வட்டார அளவிலான போட்டிகளுக்குப் பரிந்துரைக்க வேண்டும். இப்பரிந்துரை வழிகாட்டு நெறிமுறையின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு அமைய வேண்டும். மேலும் இதனை EMIS Portal மென்படிவத்தில் தான் உள்ளீடு செய்தல் வேண்டும்.

5.06. பள்ளி அளவில் நடைபெறும் பள்ளிக் கலைத் திருவிழாவில் பெற்றோர் ஆசிரியர் சங்கம், பள்ளி மேலாண்மைக்குழு, உள்ளூர் சமூகப்பிரதிநிதிகள் ஆகியோரின் முழுமையான ஈடுபாட்டையும் ஒத்துழைப்பையும் பெறுதல் மிக மிக இன்றியமையாதது.

5.07. பள்ளி அளவிலான எல்லாப் போட்டிகளும் ஒருங்கிணைந்த மாநில திட்ட இயக்குநரின் செயல்முறைகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேதிக்குள் நடத்தி முடிக்கப்பட வேண்டும்.

5.08. கடந்த ஆண்டு கலைத்திருவிழா போட்டிகளில் பங்கேற்று மாநில அளவில் வெற்றி பெற்ற மாணவர்/ மாணவிகள் இவ்வாண்டு போட்டிகளில் அதே போட்டிகளில்

## VI. வட்டார அளவிலான கலை திருவிழா போட்டிகளை நடத்துதல் சார்ந்து விதிமுறைகள்

6.01. அவ்வட்டாரத்தில் உள்ள அனைத்து அரசு பள்ளிகளிலும் நடத்தப்பட்ட கலைத் திருவிழா போட்டிகளில் முதல் தகுதி பெற்ற மாணவர்களைக் கொண்டு அவ்வட்டாரத்தில் உள்ள ஏதேனும் ஒரு பள்ளியில் பிரிவு மற்றும் கலையின வாரியாக போட்டிகள் நடத்தப்பட வேண்டும். இது ஒரு பொது நிகழ்ச்சியாகவும் அதிக ஆரவாரம் இல்லாததாகவும் நடத்தப்பட வேண்டும்.

6.02. ஏதேனும் ஒரு கலைப்பிரிவில் ஒரே ஒரு போட்டியாளர் மட்டுமே இருந்தால், அவர் அடுத்த நிலை போட்டிக்கு அனுப்பப்படுவார்.

**6.03. மாணவர்கள் எவரும் பதிவுக்கட்டணம் செலுத்த வேண்டியதில்லை**

6.04. வட்டார அளவில் விழாவினை நடத்துவதற்காக, தனியே நிதி வழங்கப்படும்

6.05. வட்டார அளவிலான கலைத் திருவிழா போட்டி சார்ந்த அனைத்து வரவு செலவு கணக்குகளும் தனியாகப் பராமரிக்கப்பட்டு முறையாகத் தணிக்கை செய்யப்பட்டு, தணிக்கை அறிக்கையினை பயனிட்டு சான்றுடன் (Utilisation Certificate) மாநில திட்ட இயக்ககத்திற்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

6.06. விழா ஏற்பாட்டுக்காகப் பெறப்பட்ட தொகையில் செலவு போக மீதம் இருந்தால் மாநில திட்ட இயக்ககத்தின் உரிய தலைப்பில் திருப்பி செலுத்த வேண்டும்.

6.07. வட்டார அளவில், கலை விழாவினை நடத்துவதற்குக் கீழே குறிப்பிட்டவாறு அமைப்புக் குழு ஒன்றனை அமைக்க வேண்டும்.

**இக்குழுவில் இடம் பெறுவோர்:**

- தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் (சட்டமன்ற உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர்)
- பெற்றோர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள்
- பள்ளி மேலாண்மைக் குழு தலைவர்/ உறுப்பினர்

- ❖ அரசு நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்
- ❖ மாவட்டக் கல்வி அலுவலர் பரிந்துரை செய்யும் கலை வல்லுநர், மூன்று பேர்
- ❖ வட்டாரக் கல்வி அலுவலர் அக்குழுவின் செயலராகச் (பதவி வழி) செயல்படுவார்
- ❖ வட்டார வளமைய மேற்பார்வையாளர் மற்றும் வட்டார வளமைய ஒருங்கிணைப்பாளர்
- ❖ இக்குழுவின் உறுப்பினர்களின் எண்ணிக்கை தேவைக்கேற்ப அமையலாம்

இங்குக் கூறப்பட்டுள்ள அமைப்புக் குழுவின் கட்டமைப்பு பரிந்துரை மட்டுமே, இது முற்றிலும் முடிவானதன்று. குழுவின் கட்டமைப்பு அந்தந்த வட்டாரத்தின் வசதிகளுக்கு ஏற்ப அமைக்கப்படலாம்.

6.08. எந்தப் பள்ளியில் போட்டி நடைபெறுகிறதோ அப்பள்ளியில் தலைமை ஆசிரியர் முதன்மை அமைப்பாளராக செயல்படுவார். மேலும் ஒரு தலைமையாசிரியர் உதவி அமைப்பாளராகச் செயல்படுவார்.

6.09. வட்டார அளவிலான போட்டிகள் மாநில திட்ட இயக்குநரின் செயல்முறையில் குறிப்பிட்டுள்ள நாட்களுக்குள் நடத்தி முடிக்கப்பட வேண்டும். முடிந்தவரை நிகழ்ச்சிகள் யாவும் பகல் நேரத்தில் நடத்துவது ஏற்புடையதாகும்.

6.10. ஏற்கனவே தயார் செய்யப்பட்டுள்ள நடுவர்களின் பட்டியலில் இருந்து நடுவர்களைத் தேர்வு செய்யும் அதிகாரம் வட்டாரக்கல்வி அலுவலருக்கு உண்டு.

6.11. ஒரு கலை இனத்தின் ஒரு பிரிவின் அனைத்து நிகழ்ச்சிகளையும் அதே நடுவர்கள் தான் மதிப்பீடு செய்ய வேண்டும். உதாரணமாக ஒரு பிரிவிற்கு (6 முதல் 8 வகுப்பு) ஒயிலாட்டம் என்கிற கலை இனத்தின் நடுவராக இருப்பவர்களே அக்கலை இனத்திற்கான அப்பிரிவிற்கு நடுவர்களாக இருப்பர்.

6.12. மாணவர்களை பாதுகாப்பாக அழைத்துச் சென்று மீண்டும் கொண்டு வந்து சேர்த்தல் பள்ளித் தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்களின் பொறுப்பு ஆகும். மாணவ –மாணவர்களின் பாதுகாப்புக்கென இருபால் ஆசிரியர்களையும் உடன் செல்ல அறிவுறுத்த வேண்டும்.

**6.13. கீழ்காணும் விதிமுறைக்குட்பட்டு மாவட்ட அளவிலான போட்டிகளுக்கு அனுப்பப்படுவார்கள்**

அடுத்த நிலையிலான போட்டிகளில் கலந்துகொள்ள தனிநபர் / குழு போட்டியென்றால் ஒரு கலை இனத்திற்கு வட்டார அளவில் முதல் இரண்டு இடங்களில் தேர்வு செய்யப்பட்ட தனிநபர் / குழுவினர் மாவட்ட அளவிலான போட்டிக்கு அனுப்பப்படுவார்.

6.14. வழிகாட்டு நெறிமுறைகளில் கொடுக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு முறை மற்றும் அதன் கணக்கீடு ஆகியவற்றிற்கு ஏற்ப வெளிப்பாடுகள் (Performances) மதிப்பிடப்பட்டு இறுதி முடிவு எடுக்கப்படுதல் வேண்டும்.

6.15. வட்டார அளவில் முதல் இரண்டு இடங்களை பிடித்த தனிநபர் / குழுவை மாவட்ட அளவில் நடைபெறும் போட்டிக்கு அனுப்பும் பொழுது வட்டார அளவிலான முழு அறிக்கை மற்றும் நிகழ்ச்சிகளின் குறுந்தகடு பதிவு ஆகியவற்றை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் மற்றும் மாநில திட்ட இயக்குநருக்கும் அனுப்புதல் வேண்டும். வெற்றி பெற்ற இருவர் / இரு குழுக்கள் பற்றிய முழுமையான விவரங்களை மாவட்ட அளவிலான போட்டி அமைப்பாளர்களுக்கு உடனடியாக அனுப்புதல் வேண்டும்.

(a) நடுவர்களின் மதிப்பீட்டுப் பட்டியலில் அடித்தல், திருத்தல், வெள்ளை மை வைத்து அழித்தல் ஆகியன முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும். தவிர்க்க முடியாத நிலையில் திருத்தங்களுக்கு நடுவரின் முழுக் கையெழுத்து இடம்பெற வேண்டும்.

(b) நடுவர்கள் தயாரித்த மதிப்பீட்டுப் பட்டியல், தொகுப்பு மதிப்பீட்டுப் பட்டியல் மற்றும் வென்றவர்களின் பட்டியல் யாவும் 3 மாதக்காலத்திற்குக் கவனமாகப் பாதுகாக்கப்பட வேண்டும். மேற்கண்ட மதிப்பீட்டுப் பட்டியல் மேல் முறையீட்டுக்குக் குழுவின் தலைவர் அல்லது மாநில திட்ட இயக்குநர் அவர்கள் கேட்கும் பொழுது வழங்கப்பட வேண்டும்.

6.16. போட்டிகளை நடத்துவதற்கு ஆசிரியர்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளலாம். பல்வேறு குழுக்களில் இடம் பெற்ற ஆசிரியர்களைத் தவிர, பிறர் யாரும் விழா நடவடிக்கைகைளில் ஈடுபடக்கூடாது.

6.17. பணியில் அமர்த்தப்பட்ட ஆசிரியர்களுக்கான வருகைப் பதிவுச் சான்றிதழ் தலைமை அமைப்பாளரால் மட்டுமே வழங்கப்பட வேண்டும்.

## VII. மாவட்ட அளவிலான கலைத் திருவிழா போட்டிகளை நடத்தும் விதிமுறைகள்

7.01. மாவட்ட அளவிலான போட்டிகள் பள்ளிக் கல்வித் துறையின் ஆணைக்கிணங்க நடத்தி முடிக்கப்பட வேண்டும். இப்போட்டிகளை அந்த மாவட்டத்தில் உள்ள ஏதேனும் ஒரு பள்ளியில் நடத்திக் கொள்ளலாம்,

தனிப்போட்டி, குழு போட்டிக்கான– பட்டியலை ஒவ்வொரு இனத்திற்கும் தனித்தனியே தயாரித்தல்.

7.02. வட்டார அளவில் பரிந்துரைக்கப்பட்ட இருவர் / இரு குழுக்கள் மட்டுமே மாவட்ட அளவில் கலந்து கொள்ள முடியும்.

7.03. மாவட்ட அளவிலான 'விழா அமைப்புக் குழு' கீழ்வருமாறு அமைக்கப்படலாம். இது பரிந்துரை மட்டுமே, மாவட்டத்தின் தேவைக்கேற்ப இக்குழுவின் கட்டமைப்பு மாறுபட்டும் அமையலாம்.

**சிறப்பு அழைப்பாளர்கள்:**

அம்மாவட்டத்தின் அமைச்சர், மாவட்ட ஆட்சியர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர், பாராளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட ஊராட்சி மன்றத் தலைவர் மற்றும் பேரூராட்சி மன்றத் தலைவர் ஆகியோர் பங்கேற்க செய்ய வேண்டும்.

**தலைவர் மற்றும் துணைத்தலைவர்**

மாநகரத் தந்தை / மாவட்ட ஊராட்சி / நகர மன்றத் தலைவர் (எவரேனும் ஒருவர்)

**தலைமை அமைப்பாளர்**

மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்

**துணை அமைப்பாளர்**

மாவட்டக் கல்வி அலுவலர் / மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவன முதல்வர் (எவரேனும் ஒருவர்)

**பொருளாளர்**

உதவி மாவட்டத் திட்ட ஒருங்கிணைப்பாளர் / உதவி திட்ட அலுவலர்

உறுப்பினர்கள்

1. பல்வேறு கிளை குழுக்களின் அமைப்பாளர்கள்
2. ஆசிரியர் பிரதிநிதிகள்
3. வட்டாரக் கல்வி அலுவலர்கள்
4. போட்டி நடைபெறும் பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தலைவர்.

7.04. மாவட்ட அளவிலான போட்டிகளை மாநில திட்ட இயக்குநரின் செயல்முறையில் குறிப்பிடப்பட்ட நாட்களுக்குள் நடத்தி முடிக்கப்பட வேண்டும்.

7.05. வட்டாரம் மற்றும் மாவட்டங்களுக்கு மாநிலத் திட்ட இயக்கத்திலிருந்து நிதி வழங்கப் பரிந்துரைக்கப்படுகிறது. மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரால் நியமிக்கப்படும் கணக்காளர்களால் வரவு செலவு கணக்கு ஒரு மாதத்திற்குள் முடிக்கப்பட்டு அக்கணக்கானது விழா குழுவால் ஒப்புதல் வழங்கப்பட

வேண்டும். மேலும் இந்த வரவு செலவு கணக்கு முறைப்படி தணிக்கை செய்யப்பட வேண்டும் பயனீட்டுச் சான்றிதழ் (Utilisation Certificate) மீதத் தொகை இருப்பின் மாநில திட்ட இயக்ககத்திற்கு உரிய தலைப்பில் திருப்பி செலுத்தப்பட வேண்டும்.

7.06. தகுதி வாய்ந்த நடுவர்களை அங்கீகரிக்கப்பட்ட நடுவர்களின் பட்டியலில் இருந்து அமைப்புக் குழுவின் ஒப்புதலோடு நியமிக்க வேண்டும்.

7.07. நடுவர்களின் பட்டியல் ரகசியமாக வைக்கப்பட வேண்டும். ஒரு கலை இனத்தின் (Item) நடுவர்கள் தான் அக்கலை இனத்தின் அனைத்து நிகழ்ச்சிகளையும் மதிப்பிட வேண்டும். போட்டி தொடங்குவதற்கு முன்பு நடுவர் பற்றிய விவரம், அவரது தகுதி, பெற்ற விருதுகள் மற்றும் பெருமைகள் பற்றிய அறிமுகம் மேடையில் அறிவிக்கப்பட வேண்டும்.

7.08. போட்டி தொடங்குவதற்கு முன்பே, நடுவர்கள் மதிப்பீடு செய்தல் பற்றிய முழு விவரம் மற்றும் ஒவ்வொரு நிலைக்குமான மதிப்பீட்டு முக்கியத்துவம் (Weightage) பற்றிய விவரங்கள் (Annexure – I) தரப்பட வேண்டும். நெறிமுறை வழிகாட்டியில் கூறப்பட்டுள்ள மதிப்பீட்டு விதிமுறைகளுக்கு உட்பட்டும், நிகழ்ச்சி படைப்பாளிகளின் தனித்திறன்களை, செயல்பாடுகளை, அம்சங்களை, இயக்கங்களை மிகுந்த கவனத்துடன் மதிப்பிட்டும் மதிப்பெண்கள் வழங்கப்பட வேண்டும்.

7.09. மதிப்பீட்டுத் தாளில் திருத்தம் / அடித்தல் கூடாது தேவைப்படுமேயானால், திருத்தங்கள் உரிய முறையில் நடுவர்களின் முழுக் கையொப்பத்துடன் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

7.10. போட்டி முடிந்த உடனேயே அதே மேடையில் நடுவர்கள் கால தாமதமின்றி போட்டி முடிவுகளை அறிவிக்க வேண்டும்.

7.11. மதிப்பீட்டுத் தாள்கள், முடிவுகள் யாவும் முறையாக உறையிலிடப்பட்டு, சீல் செய்யப்பட்டு முதன்மைக் கல்வி அலுவலரின் அலுவலகத்தில் வைக்கப்பட வேண்டும்.

7.12. மாவட்ட அளவில் போட்டியில் பங்கேற்கும் அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்பட வேண்டும்.

7.13. மாவட்ட அளவிலான போட்டி முடிந்தவுடனே அது பற்றி தொகுப்பு அறிக்கையை மாநிலத் திட்ட இயக்ககத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

7.14. ஒரு கலை இனத்திற்கு மாவட்ட அளவில் ஒரு நபர் அல்லது ஒரு குழு என்கிற கணக்கில்தான் மாநில அளவிலான போட்டியில் பங்கு கொள்ள முடியும்.

## VIII. மாநில அளவில் பள்ளிக் கலைத் திருவிழாவினை நடத்துவது சார்ந்த விதி முறைகள்

8.01. மாவட்ட அளவிலான 'விழா அமைப்புக் குழு' கீழ்வருமாறு அமைக்கப்படலாம். இது பரிந்துரை மட்டுமே, மாவட்டத்தின் தேவைக்கேற்ப இக்குழுவின் கட்டமைப்பு மாறுபட்டும் அமையலாம்.

பள்ளிக் கல்வித் துறையின் ஆணைக்கிணங்க மாநில அளவிலான கலைத் திருவிழா போட்டிகளை நடத்தி முடிக்க வேண்டும்.

8.02. வழிகாட்டு நெறிமுறைகளுக்கு உட்பட்டு மாவட்ட அளவில் முதல் இடம் பெற்ற மாணவர் / குழு மட்டுமே மாநில அளவிலான போட்டிகளில் பங்கு கொள்ள முடியும்.

8.03. மாநில அளவில் அமைப்பாளர் குழு ஒன்று (Organizing Committee) அமைக்கப்பட வேண்டும். இக்குழுவின் கட்டமைப்பு கீழ்வருமாறும் அமையலாம்.

**அமைப்புக்குழு (Organizing Committee)**

- ❖ மாண்புமிகு முதலமைச்சர்
- ❖ மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்
- ❖ மாண்புமிகு கல்வி அமைச்சர்
- ❖ போட்டி நடைபெறும் மாவட்டத்தைச் சார்ந்த மாண்புமிகு அமைச்சர்கள் சார்ந்த மாவட்ட எம்.எல்.ஏ., எம்.பி. மாவட்ட ஆட்சியாளர், மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்.

**தலைவர் (Chairman)**

மாண்புமிகு பள்ளிக் கல்வி அமைச்சர்

**துணைத் தலைவர்**

பள்ளிக் கல்வி இயக்குநர்

**பொது அமைப்பாளர் (General Convener)**

மாநில திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி

**பொது ஒருங்கிணைப்பாளர்கள் (Gerneral Coordinators)**

கூடுதல் மாநில திட்ட இயக்குநர்–ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி

இயக்குநர் –தொடக்கக் கல்வி

இயக்குநர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்

**இணை ஒருங்கிணைப்பாளர்கள்**

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி இணை இயக்குநர்

மேல்நிலைக் கல்வி இணை இயக்குநர்

இடைநிலைக் கல்வி இணை இயக்குநர்

தொடக்கக் கல்வி இணை இயக்குநர்

**இணை பொது அமைப்பாளர்கள்**

சார்ந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்

மாவட்டக் கல்வி அலுவலர்

முதல்வர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்

**பொருளாளர்** – சார்ந்த மாவட்ட முதன்மைக கல்வி அலுவலக கணக்காளர்

**உறுப்பினர்கள் (Members)**

1. எல்லா கிளைக்கு குழுக்களின் தலைவர்கள் மற்றும் அமைப்பாளர்கள்
2. பிற துறைத் தலைவர்கள் (Directors of Different Department)
3. போட்டி நடைபெறும் பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர்
4. பள்ளி மேலாண்மைக்குழு தலைவர்
5. தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்

பள்ளிக் கல்வித் துறையின் அவ்வப்போதைய ஆணைக்கிணங்க அமைப்புக்குழு, கட்டமைப்பு ஆகியவை மாற்றப்படலாம்.

8.04. மாநில அளவிலான போட்டிகளின் அனைத்துப் பொறுப்புகளும் அமைப்புக் குழுவைச் சார்ந்ததாகும். மாநிலப்போட்டிகள் சார்ந்த நிதிப் பொறுப்பும் இவ்வமைப்பையே சாரும். போட்டி நிறைவுற்ற பிறகு வரவு செலவு கணக்கின் அறிக்கையையும், தணிக்கை அறிக்கையையும் பயனீட்டு சான்றுடன் (Utilisation Certificate) மாநில திட்ட இயக்ககத்திற்கு ஒரு மாதத்திற்குள் அனுப்பி வைக்க வேண்டும். கிளைக் குழுக்களின் செயற்பாடுகளைக் கண்காணித்தல் மற்றும் செயல்படத் தூண்டுதல் வழிகாட்டுதல் யாவும் அமைப்புக்குழுவின் கடமையாகும்.

8.05. உட்குழுக்களைக் கீழ்வருமாறு அமைத்தல் வேண்டும். எல்லா உட்குழுக்களுக்கும் தலைவர் மக்கள் பிரதிநிதிகளாகவும், அமைப்பாளர்கள் தலைமையாசிரியர்கள், ஆசிரியர்களாக இருக்க வேண்டும். (இவை யாவும் பரிந்துரை மட்டுமே – இறுதியானது அல்ல).

**<u>குழுக்களின் பொறுப்புகள்</u>**

1. வரவேற்புக் குழு: (Reception Committee)

செயலாக்கக் குழுவின் தலைவருடன் கலந்து பேசி தொடக்க விழா, நிறைவுவிழா, போட்டி நடைபெறும் இடம் சார்ந்த விளக்க வரைபடம் தயாரித்தல் மற்றும் பல்வேறு நிகழ்ச்சிகளை வடிவமைத்தல்.

2. பதிவுக் குழு : (Registraion Committee)

பல்வேறு மாவட்டங்களிலிருந்து கலந்து கொள்ள வரும் போட்டியாளர் விவரங்களைப் பதிவு செய்தல், பதிவுப்பட்டியலின் நகலினை, தங்குமிடம், உணவு ஏற்பாட்டாளருக்கு வழங்குதல். உணவு வகைகளை அந்தந்த நேரத்திற்பப் போட்டியாளர் குழுக்களுக்கு வழங்குதல் ஆகியன.

3. நிகழ்ச்சி ஒருங்கிணைப்புக் குழு: (Programme Co-ordination Committee)

- ❖ புகார் எதுவும் எழா வண்ணம் எல்லா போட்டிகளையும் முறைப்படி நடத்துதல்
- ❖ மாவட்டங்களில் இருந்து பெறப்படும் பதிவுகளைச் சரிபார்த்து மாநில போட்டிக்கான படிவங்கள் மற்றும் தேவைகளை இறுதி செய்தல்.
- ❖ ஆண், பெண், தனிப்போட்டி, குழுப் போட்டிக்கான - பட்டியலை ஒவ்வோர் இனத்திற்கும் தனித்தனியே தயாரித்தல்
- ❖ ஒவ்வோர் இனத்திற்கு (Item)–மதீப்பீட்டுப்பட்டியல், தொகுப்பு மதிப்பீட்டுப்பட்டியல், இறுதி முடிவு அறிக்கை தயார் செய்தல் (Evaluation, Consolidated Sheet and Result Sheet)
- ❖ போட்டியாளர்களுக்கான அறிவுரைகள் அடங்கிய குறிப்புத்தாள் தயாரித்தல்
- ❖ போட்டியாளர்களுக்கான அடையாள எண் பட்டை தயார் செய்தல்
- ❖ அரங்க மேற்பார்வை, நிகழ்ச்சி அமைப்பு - இவற்றிற்கு ஆசிரியர்களை நியமித்தல்
- ❖ போட்டிகளுக்கான நாள், நேரம், குறித்த பட்டியல் (Programme Schedule)
- ❖ அரங்க - அறிவிப்பாளர் (நிகழ்ச்சிப் படைப்பாளர்) நியமன ஏற்பாடுகளைச் செய்தல்
    - மதிப்பீட்டுப் பட்டியல், நேரக்காப்பாளர் ஏற்பாடு செய்தல்
    - போட்டியாளர்களைத் தயார் நிலையில் வைத்தல்
    - நடுவர்களுக்கான இருக்கை, தேநீர், உணவு ஆகியவற்றைக் கவனித்தல்
    - போட்டியில் தகுதி பெற்றவர்கள் பட்டியலைத் தயார் செய்தல்

-  அந்தந்த நாட்களுக்கான நிகழ்வுகளின் முடிவுகளை அன்றே தயார் செய்து அறிவித்தல் மற்றும் பாதுகாத்தல்
-  ஒரு போட்டியாளர் - பல்வேறு போட்டிகளில் பங்கு பெறுவதாக இருந்தால் அதற்கேற்றாற்போல நேர மாற்றம் செய்து கொடுத்தல்.
-  EMIS தகவல் பதிவேற்றம் குழு: தேவைக்கேற்ப எண்ணிக்கையில் ஆசிரியர் பயிற்றுநர்கள் உறுப்பினர்களாக கொண்ட குழுவினை அமைத்து பங்கேற்பாளர்கள் மற்றும் வெற்றியாளர்கள் விவரங்களை சரிபார்த்து EMIS தளத்தில் பதிவேற்றம் செய்தல் வேண்டும்.

4. போக்குவரத்துக் குழு: (Transport Committee)

   நடுவர்கள், அலுவலர்கள் மற்றும் போட்டியாளர்களுக்குப் போக்குவரத்து வசதிகள் செய்து தருதல்.

5. இடவசதிக் குழு: (Accommondation Committee)

   -  பதிவுக் குழுவுடன் இணைந்து செயல்பட வேண்டும்
   -  அனைவருக்கும் தங்குவதறக்ன இடம், குடிநீர், மின்சாரம், தூய்மை, கழிப்பறை வசதிகள் ஏற்படுத்துதல்.
   -  சிறப்பு வருந்தினர், நடுவர்களுக்கான தங்குமிட வசதிகளை ஏற்பாடு செய்தல்.
   -  ஒவ்வொரு பகுதிக்கும் தனித்தனியே தன்னார்வர்கள் நியமித்தல்.

6. உணவுக் குழு: (Food Committee)

   அனைவருக்கும் - உணவு வழங்குவதற்கான டோக்கன், உணவுப் பட்டியல் தயாரித்தல் மற்றும் விநியோகம் ஆகியவற்றிற்கு குழுக்களை அமைத்து மேற்பார்வையிடல்.

7. விளம்பரக் குழு: (Publicity Committee)

   ஊடகத் தொடர்பு, போட்டி முடிவுகள் வெளியீடு - புகைப்படங்கள் அன்றாட ஊடக நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு மற்றும் உள்ளூர் கேபிள் TV யில் விளம்பரம் செய்தல்.

8. மலர் வெளியீடு ஊடக ஆவணதாரிப்புக் குழு: (Souvenir and Media documentation Committee)

   கட்டுரை, துணுக்குகள், விளம்பரங்கள் பெறுதல் இறுதி நாளன்று மலர் வெளியிட ஏற்பாடு செய்தல், அனைத்து மாவட்டங்களுக்கும் மலர் வழங்க ஏற்பாடு செய்தல்.

9. மேடை பராமரிப்பு, பாதுகாப்பு மற்றும் அலங்காரக்குழு (Stage & Decoration Committee)

ஒப்பனை அறைகள் – உணவு தயாரிக்கும் இடம் – ஏற்பாடு – செய்தல், தீயணைப்புத்துறையின் உதவியை நாடுதல், பொதுப்பணித்துறையில் (P.W.D) இருந்து அரங்கப் பாதுகாப்புப் பற்றிச் சான்றிதழ் பெறுதல், தொலைபேசி (Telephone), furniture, Banner ஆகியவற்றிற்கான ஏற்பாடுகள் முதலியன.

10. ஒளி, ஒலி குழு: (Light and Sound Committee)

ஒளி விளக்குகள், அலங்கார விளக்குகள், மின் விசிறிகள், Emergency light and Generator ஆகியன ஏற்பாடு செய்தல்.

11. சான்றிதழ் மற்றும் பரிசுக்குழு: (Certificate and Prize Committee)

சுழல் கேடயங்களை திரும்பப் பெறுதல் – புது கேடயங்கள், பங்கேற்ற / பரிசு பெற்றோருக்கான சான்றிதழ்கள், பரிசுப் பொருட்களை வாங்கி, முறைப்படுத்தி வைத்தல்.

12. சுகாதாரக்குழு: (Health Committee)

மருத்துவ வசதி – முதலுதவி – ஏற்பாடு செய்தல், தங்குமிடம், உணவு வழங்குமிடம் ஆகிய இடங்களில் தூய்மைப் பராமரிப்பு ஆகியன.

13. மாணவர் பாதுகாப்பு மற்றும் ஒழுங்கு கட்டுப்பாட்டுக்குழு: (Student Safety and Discipline Committee)

அமைதி – ஒழுக்கம் – கண்காணித்தல் – மாணவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்வது – NCC, NSS, SCOUT and GUIDE மாணவர்களை ஒருங்கிணைத்துச் செயல்படுத்தல்.

14. நிதிக்குழு: (Finance Committee)

குழு அமைப்பின் வடிவம்

1. General Convener – பொது அமைப்பாளர்
2. Treasures (General Committee) – பொருளாளர் சார்ந்த மாவட்ட முதன்மைக் கணக்காளர்
3. Concerned A/C officer from CEO ஆகியோர் இக்குழுவில் இடம் பெறுவர்.

நிதி பெறுதல், பதிவேடுகள் பராமரித்தல், தணிக்கைக்கு ஏற்பாடு செய்தல். பல்வேறு உட்குழுக்களின் நிதிவேண்டுதலை ஆராய்ந்து நிதி வழங்குதல், பல்வேறு

உட்குழுக்கள் கொடுக்கும் செலவினக் கணக்குகளைச் சரிபார்த்து பயனீட்டு சான்று சமர்ப்பித்தல் (Utilisation Certificate) ஆகியன.

15. கலாச்சார அணி வகுப்புக் குழு: (Parade Committee)

தொடக்க மற்றும் நிறைவு விழாவிற்கு பல்வேறு கலாச்சார நிகழ்வுகளை ஏற்பாடு செய்தல்.

16. **எங்கள் பள்ளி, மிளிரும் பள்ளி** - திட்டத்தின் கீழ் போட்டிகள் நடைபெறும் இடங்களில் தூய்மையினை உறுதி செய்யவும், பிளாஸ்டிக் பயன்பாட்டை குறைக்கவும் மற்றும் கழிவு மேலாண்மை மேற்கொள்ளபடுதல் வேண்டும்.

17. **குறைத்தீர் குழு:** கலைத்திருவிழா போட்டிகளின் போது எழும் புகார்களை உரிய முறையில் தீர்க்கவும், வழிகாட்டுதல்கள் வழங்கவும் போட்டிகள் தொடர்பான விவரங்களை வழங்கவும் சார்ந்த மாவட்டங்களில் குறைத்தீர் குழு அமைத்தல் வேண்டும்.

## IX. மேல் முறையீட்டு மன்றம்

9.01. போட்டியின் முடிவுகள் பற்றி மேல்முறையீடு செய்வதற்கான மேல்முறையீட்டு மன்றம் அமைக்கப்பட வேண்டும். மேல்முறையீட்டு மன்றம் ஒரு கலை இனத்தின் நுட்பம், அது சார்ந்த சிறப்புக் கூறுகளைக் கருத்திற் கொண்டே இறுதி முடிவு எடுக்க வேண்டும்.

9.02. மறுமதிப்பீடு – மறுமேடையேற்றம் போன்ற செயல்கள் அனுமதிக்கப்படமாட்டாது. பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பத்தில் தான் மேல்முறையீடு செய்தல் வேண்டும் மேலும் இறுதி தீர்ப்பும் அதற்குரிய படிவத்தில் மட்டுமே தெரிவிக்கப்பட வேண்டும்.

9.03. பள்ளி, வட்டாரம், மாவட்டம் மற்றும் மாநில அளவில் மேல்முறையீடு செய்யலாம். முறையீடு செய்தவருக்கு சாதகமாக தீர்ப்பளிக்கப்பட்டால் செலுத்தப்பட்டத் தொகை திருப்பித் தரப்படும். இல்லையெனில், செலுத்திய தொகை திருப்பித் தரப்பட மாட்டாது.

9.04. மேல்முறையீட்டுக் குழுவின் முடிவே இறுதியானது, மேல்முறையீடு செய்த ஒரு குழு மேல்முறையீட்டாளர் குழுவின் பரிந்துரை அல்லாமல் அடுத்த கட்ட போட்டியில் கலந்து கொள்ள முடியாது.

9.05. ஒழுங்ககீனமாக நடந்து கொள்ளும் போட்டியாளர்களைக் கையாள்வதற்காக 5 பேர் கொண்ட ஒழுக்கக் குழு அமைக்கப்பட வேண்டும். அதில் மகளிர் ஒருவரும் இடம் பெற வேண்டும்.

9.06. **பள்ளிகளுக்கான மேல்முறையீட்டு மன்றம்:** மாவட்டக் கல்வி அலுவலரின் தலைமையின் கீழ், கலை வல்லுனர்கள் இருவர் மற்றும் இரு கல்வித்துறை அலுவலர்கள் அடங்கிய ஐந்து பேர் கொண்ட பள்ளிகளுக்கான மேல்முறையீட்டு மன்றம் அமைக்கப்பட வேண்டும். ஒரு கல்வி மாவட்டத்திற்கு ஒரு மேல்முறையீட்டு மன்றம் அமைக்கப்பட்டு பள்ளிகளில் இருந்து பெறப்படும் மேல்முறையீடுகளை ஆய்வு செய்யும் பணியினை இம்மன்றம் மேற்கொள்ள வேண்டும்.

- பள்ளியில் போட்டிகள் நடந்து முடிந்து முடிவுகள் அறிவிக்கப்பட்டு, ஒரு மணி நேரத்திற்குள்ளாக ரூபாய் 500 கட்டணம் செலுத்தி மேல் முறையீடு அந்தந்த பள்ளியிலேயே செய்தல் வேண்டும்.

- இதற்கான படிவத்தில்தான் மேல்முறையீடு செய்யப்படல் வேண்டும். மேல்முறையீடு மன்றம் ஐந்து நாளுக்குள்ளாக அல்லது கல்வி மாவட்ட அளவிலான போட்டிக்கு முன்பாக மேல்முறையீட்டை விசாரித்துத் தீர்ப்பு வழங்கிட வேண்டும்.

முறையீட்டின் தீர்ப்பு – போட்டியாளர்களுக்கு சாதகமாக இருந்தால் அவர் கட்டிய தொகை திருப்பித் தரப்பட வேண்டும்.

9.07. **வட்டார அளவிலான போட்டிகளுக்கான முறையீட்டு மன்றம்:**

- வட்டார நிலைக்கான மேல்முறையீட்டுக் குழு ஒன்றினை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அமைக்க வேண்டும்.
- முதன்மைக் கல்வி அலுவலரின் தலைமையில், இரு கல்வித்துறை அலுவலர்கள் மற்றும் இரு கலைத்துறை வல்லுநர்கள் கொண்ட ஐவர் குழு – அமைக்கப்பட வேண்டும்.
- மேல் முறையீட்டு விதிமுறைகள் யாவும் பள்ளி நிலைப் போட்டிக்கான மேல் முறையீடு மன்றத்திற்கு குறிப்பிடப்பட்டதனைப் போலவே அமையும்.

9.08. **மாவட்டங்களுக்கான முறையீட்டு மன்றம்:**

மாவட்ட நிலையிலான போட்டிகளுக்கான மேல்முறையீட்டு மன்றம் மாவட்ட ஆட்சித் தலைவர் / முதன்மைக் கல்வி மாவட்ட அலுவலர் தலைமையின் கீழ் – கல்வி அதிகாரிகள் 2 பேர் மற்றும் கலைப்பிரிவுகளின் வல்லுநர்கள் 6 பேர் என 9 பேர் கொண்ட அமைப்பாக உருவாக்க வேண்டும்.

கலை வல்லுநர்கள் 6 பேர் கீழ்வரும் பிரிவுகளைச் சார்ந்தவராக இருக்க வேண்டும்.

1. செவ்வியல் நடனக்கலை வல்லுநர்
2. செவ்வியல் இசை மெல்லிசை வல்லுனர்
3. தந்தி இசைக் கருவிகளின் வல்லுநர்
4. நுண்கலை வல்லுநர்
5. நாட்டுப்புறக் கலைஞர்
6. இசைக்கருவிகளின் வல்லுனர்

இம்மன்றம் ஓராண்டு அல்லது அடுத்த மாநில அளவிலான போட்டி தொடங்கப்படும் நாள் வரை நிலை பெற்றிருக்கும். இதனுடைய நியமனம் கல்வித்துறை துணை இயக்குநரால் அமைக்கப்பட்டு அறிவிக்கப்பட வேண்டும்.

9.09. (a) மாவட்ட அளவில் போட்டியிட்டு மேல்முறையீட்டு மன்றத்தின் மூலம் நியாயம் பெற்று ஒருவர்/ ஓர் அணி மாநில அளவில் கலந்து கொள்ள நுழைவு கட்டணம் ஆக ரூபாய் 1000/– செலுத்த வேண்டும்.

(b) இப்போட்டியாளர் மாநில அளவிலான போட்டியில் மாவட்ட அளவில் பெற்ற உயர் மதிப்பெண்ணை விட அதிக மதிப்பெண் பெற்றால்தான் சான்றிதழ் பெறுவதற்கும், செலுத்திய பணத்தைத் திரும்பப் பெறுவதற்கும் தகுதி பெறுவார்.

மேல்முறையீட்டு மன்ற உறுப்பினர் அனைவரின் தற்சார் தகவல்கள் (Bio - Data) தயாரிக்கப்பட்டு மன்றத் தலைவரின் பொறுப்பில் வைக்கப்பட வேண்டும்.

மேல்முறையீட்டு மன்ற உறுப்பினர்கள் யாவரும் தமது பிள்ளை/ உறவினர்/மாணவர் என எவரும் இப்போட்டிகளில் கலந்து கொள்ளவில்லை என்கிற உறுதிமொழி அளிக்க வேண்டும்.

மேல்முறையீட்டு மன்றம் கலை இனத்தின் இலக்கணக் கூறுகள், வழிகாட்டு நெறிமுறை மற்றும் விதிமுறைகளை மட்டுமே கருத்திற் கொண்டு முறையீட்டைத் தற்சார்பின்றி ஆராய்ந்து தீர்வு காண வேண்டும்.

மற்ற விதிமுறைகள் – ஏற்கனவே பள்ளி நிலை மேல்முறையீட்டு மன்றத்திற்குக் கூறியவாறு அமையும். மேல்முறையீடு சார்ந்த தாள்கள் யாவும் கோப்பில் பாதுகாப்பாக வைக்கப் பெறுதல் வேண்டும்.

9.10. **மாநில அளவிலான மேல்முறையீட்டு மன்றம்:**

மாநில அளவிலான போட்டிக்கான முறையீட்டு மன்றம் சார்ந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் தலைமையின் கீழ் அமையும். மாவட்ட கல்வி அலுவலர்கள் 4 பேர், கலை வல்லுநர்கள்–8 பேர் என மொத்தம் 13 பேர் அடங்கிய அமைப்பாகும். இம்மன்றத்தில் எட்டுக்கலை வல்லுநர்கள் கீழ்வரும் நிலைகளில் அமைவர்.

1. செவ்வியல் நடனக் கலை வல்லுநர்
2. செவ்வியல் மற்றும் மெல்லிசை வல்லுநர்
3. கிராமியக் கலைகளின் வல்லுநர்
4. இசைக் கருவிகளின் வல்லுநர்

5. ஓவியக் கலையின் வல்லுநர்
6. தாள இசைக்கருவிகளின் வல்லுநர்
7. மொழித்திறனாளர்
8. நாடகக் கலை வல்லுநர்

இவர்கள் தவிர, தேவைப்படின் வேறு வல்லுநர்களைக் கூடுதலாக நியமித்துக் கொள்ள மன்றத் தலைவருக்கு அதிகாரம் உண்டு.

9.11. மாநில அளவில் மேல் முறையீட்டுக் ரொக்க கட்டணம் ரூ.2000/– ஆகும்.

9.12. மேல்முறையீட்டு மன்றம் சார்ந்த ஏற்கனவே கூறப்பட்ட விதிமுறை, நெறிமுறைகள் மாநில அளவிலான மன்றத்திற்கும் பொருந்தும்.

9.13. மாநில மேல்முறையீட்டு மன்றத்தின் முடிவே இறுதியானது.

## X. கலைத் திருவிழா 2023–24– பொதுவான விதிமுறைகள்

10.01. மாநில மேல்முறையீட்டு மன்றத்தின் முடிவே இறுதியானது.

10.02. எழுதுதல் சார்ந்த போட்டிக்குத் தாள்கள் (Paper) மட்டுமே வழங்கப்படும். பிற பொருள்கள் அனைத்தையும் போட்டியாளர் கொண்டு வர வேண்டும்.

10.03. போட்டிகளுக்கான தலைப்புகளை நடுவர்களே தீர்மானிப்பர்.

10.04. செவ்வியல் இசைக்கு (Clasical Music) சுதிப்பெட்டி பயன்படுத்திக் கொள்ளலாம். மேலும் போட்டியாளர்கள் தமக்குப் பிடித்த ராகத்தில் பாட அனுமதியுண்டு.

10.05. கிராமிய நடனங்களில் அதற்கேற்ற கிராமிய தன்மை சார்ந்த உடைகளையே அணிதல் வேண்டும். மிகை ஒப்பனையான அலங்கார ஆடைகளை அணிதல் கூடாது.

10.06. கிராமிய நடனம் / பரதநாட்டியம் / குச்சுப்புடி / மோகினி ஆட்டம் / குழு நடனம் / ஒயிலாட்டம் / தேவராட்டம் ஆகியவற்றில் பதிவு செய்யப்பட்ட இசை / பாடல்களைப் (CD / Pen Drive) பயன்படுத்திக் கொள்ளலாம்.

10.07. பேச்சுப் போட்டிக்கான தலைப்பு 5 மணித்துளிகள் முன்பாகத்தான் குலுக்கல் சீட்டு எடுப்பது மூலம் அறிவிக்கப்படும்.

10.08. பின்புலப் பங்கேற்பாளர் / பின்னிசை இசைப்போர் யாவரும் அந்தந்த வகைக்கான வயதுடையவர்களாகவே இருக்க வேண்டும்.

10.09. மத்தளம் வாசிக்கும் போட்டிக்கு இரு துணைக் கலைஞரை வைத்துக் கொள்ளலாம்.

10.10. இசைக் குழுவின் கருவிகளை இசைப்போரும் போட்டியாளர் எண்ணிக்கையில் அடங்குவர். இசைக் கருவிகளை வல்லுநர்கள் ஆய்வு செய்த பின்னரே அவற்றை இசைக்க அனுமதியளிப்பர்.

10.11. பாரம்பரிய கலை வடிவங்களைப் படைக்கும்போது பாரம்பரியத்தை மீறிய - நவீன ஒப்பனை, நவீன துணைக் கருவிகளைப் பயன்படுத்த அனுமதி இல்லை.

10.12. கோலாட்டம், கும்மியாட்டம் போன்ற கலை இனங்களுக்கு மேனாட்டுக் கருவிகளைப் பின்புலத்தில் பயன்படுத்தக் கூடாது.

10.13. பாரம்பரியமாகப் பழக்கத்தில் உள்ள கலை வடிவங்க்ளைப் படைக்கும் போது பாரம்பரியமாகப் பயன்படுத்தப்பட்டு வரும் ராகம், தாளம் தவிர புதிய ராகம், புதிய தாளம் மற்றும் மிகைப்படியான நாட்டிய அசைவுகள் முதலியன அனுமதிக்கப்பட மாட்டாது.

10.14. ஓரங்க நாடகம் அல்லது ஒரு நீண்ட நாடகத்தின் ஏதேனும் ஓர் அங்கம் 30 மணித் துளிகளுக்குள்ளாக படைப்பதற்கு அனுமதிக்கப்படும். 7 பேர் மேடையிலும், மேடையின் பின் 3 பேர் என 10 பேர் மட்டுமே ஓர் அணியில் இடம்பெற முடியும் பின்னணி இசைக்கு (ஒளிப்பதிவு நாடா) பயன்படுத்தலாம். குழுப்பாடல் / தேசபக்தி பாடல் ஆகியவற்றில் மாணவன், மாணவி கலந்த அணி அனுமதிக்கப்படும். தேசிய ஒருமைப்பாட்டு உணர்வு கொண்ட பாடல்கள் மட்டுமே அனுமதிக்கப்படும். தேசபக்திப் பாடல்கள் தமிழில் மட்டுமே இருக்க வேண்டும் என்பது அவசியம் அல்ல, எந்த மொழியிலும் பாடப்படலாம்.

10.15. பாரம்பரியக் கருவிகள், உபகரணங்கள் (குத்துவிளக்கு, செப்புக்குடம்) எவையேனும் தேவைப்படின் அவற்றைப் போட்டியாளர்கள் ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். குழுவாக படைக்கப்படும் கலை இனங்களில் குழுவில் பங்கு கொள்ளும் அனுமதிக்கப்பட்ட அனைவருக்கும் (தகுதி இருப்பின்) சான்றிதழும், பரிசும் வழங்கப்பட வேண்டும்.

10.16. செவ்வியல் இசை (வாய்ப்பாட்டு) செவ்வியல் இசைக்கருவி பாடல் மற்றும் இவை போன்ற கலை வடிவங்களைப் போட்டி இனங்களில் இடம்பெறாதவை என இனம் காணப்பட்டால் அவற்றைக் காட்சிப்படைப்பாக படைக்கலாம். போட்டியின் விதிகளுக்கு இவை உட்படாது. மேலும் போட்டியின் தகுதித் தேர்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.

10.17. நடுவர்களை நியமிப்பதில் அதிக கவனம் செலுத்துதல் வேண்டும். போதுமான தகுதியும் அனுபவமும் நிறைந்தவரே நடுவராகத் தகுதியுடையவராகக் கருதப்படுவார். நடுவரை நியமிப்பதில் உள்ள நெறிமுறை, விதிமுறை யாவும் முற்றிலுமாகக் கடைபிடிக்கப்பட வேண்டும்.

10.18. ஒவ்வொரு கலை இனத்திற்கும் கட்டாயமாக 3 நடுவர் நியமிக்கப்பட வேண்டும். மூவரும் தனித்தனியாக அமர்ந்து பிறரைக் கலந்தாலோசிக்காமல் தமது மதிப்பீட்டை மதிப்பெண்ணாகப் பதிவு செய்தல் வேண்டும். ஒருவர் இடும் மதிப்பெண் மற்றவருக்குத் தெரியக்கூடாது.

10.19. நடுவர்களின் மதிப்பீடுகள் ஒருங்கிணைக்கப்பட்டு (மூன்று மதிப்பெண்களும் கூட்டப்பட்டு அதன் சராசரி காணப்படும்) நடுவரின் அடிப்படையில்தான் முடிவுகள் அமையும். ஒரே மதிப்பெண்ணை இருவர் பெற்றிருந்தால் – (Tie Breaker) நடுவர்களை கலந்து இறுதி முடிவு எடுக்கப்பட வேண்டும்.

10.20. முடிவுகள் யாவும் அறிவிக்கப்படும் முன் மந்தனமாக (இரகசியமாக) வைக்கப்பட வேண்டும்.

10.21. கலையினங்களுக்கான நடுவராக / மேல்முறையீட்டு மன்ற உறுப்பினராக செயல்படுபவர்கள் Annexure – v உறுதிமொழிச் சான்றிணை பூர்த்தி செய்து அளித்தல் அவசியம்.

## Annexure –I

### கலைத் திருவிழா 2023–24

### மதீப்பீடு செய்வதற்கான விதிமுறைகள்

1. வாய்ப்பாட்டு – செவ்வியல் இசை:

| | |
|---|---|
| குரல் | 20 மதிப்பெண் |
| சுதி | 20 மதிப்பெண் |
| லயம் | 20 மதிப்பெண் |
| பாடலின் வரி சுத்தம் | 20 மதிப்பெண் |
| கற்பனை சுரம் | 20 மதிப்பெண் |

2. வாய்ப்பாட்டு – மெல்லிசை:

| | |
|---|---|
| குரல் | 25 மதிப்பெண் |
| சுதி | 25 மதிப்பெண் |

| | |
|---|---|
| லயம் | 25 மதிப்பெண் |
| பாடலின் வரி சுத்தம் | 25 மதிப்பெண் |

3. கருவி இசை (காற்றிசைக் கருவி):

| | |
|---|---|
| சுதி | 25 மதிப்பெண் |
| லயம் | 25 மதிப்பெண் |
| பாவம் | 25 மதிப்பெண் |
| கற்பனை சுரம் | 25 மதிப்பெண் |

4. கருவி இசை (தந்தி இசைக் கருவி):

| | |
|---|---|
| சுதி | 25 மதிப்பெண் |
| லயம் | 25 மதிப்பெண் |
| பாவம் | 25 மதிப்பெண் |
| கற்பனை சுரம் | 25 மதிப்பெண் |

5. கருவி இசை :(Percussion type) (தோல் கருவிகள்) தாளக் கருவிகள்

| | |
|---|---|
| சுதி | 25 மதிப்பெண் |
| லயம் | 25 மதிப்பெண் |
| இசைக்கும் தன்மை | 25 மதிப்பெண் |
| பாட்டுக்கு வாசிக்கும் முறை (Presntation) | 25 மதிப்பெண் |

6. கருவி இசை (அரிய வகைக் கருவிகள்):

| | |
|---|---|
| சுதி | 25 மதிப்பெண் |
| லயம் | 25 மதிப்பெண் |
| இசைக்கும் தன்மை | 25 மதிப்பெண் |
| பாட்டுக்கு வாசிக்கும் முறை (Presentation) | 25 மதிப்பெண் |

7. செவ்வியல் நடனம்:

| | |
|---|---|
| தாளம் | 20 மதிப்பெண் |
| பாவம் | 20 மதிப்பெண் |
| அங்க சுத்தம் | 20 மதிப்பெண் |
| ஒப்பனை மற்றும் உடையலங்காரம் | 20 மதிப்பெண் |
| நடன வெளிப்பாடு | 20 மதிப்பெண் |

8. கிராமிய நடனம் / பழங்குடியினர் நடனம்

(கரகாட்டம் / மயிலாட்டம் / ஒயிலாட்டம் / தேவராட்டம்)

| | |
|---|---|
| பக்கவாத்தியங்கள் – பாரம்பரிய இசைக்கருவிகளுடன் | 20 மதிப்பெண் |
| வகைமைக்கு ஏற்ற ஆட்ட அடவுகள் | 20 மதிப்பெண் |
| ஒப்பனை மற்றும் உடையலங்காரம் | 20 மதிப்பெண் |
| நடன வெளிப்பாடு | 20 மதிப்பெண் |
| தாளம் | 20 மதிப்பெண் |

9. வில்லுப்பாட்டு:

| | |
|---|---|
| சுதி | 20 மதிப்பெண் |
| லயம் / தாளம் | 20 மதிப்பெண் |
| மொழிச் சுத்தம் | 20 மதிப்பெண் |
| கருத்து வெளிப்பாடு | 20 மதிப்பெண் |
| இசை, ஒருங்கமைப்பு (குழுச் செயல்பாடு) | 20 மதிப்பெண் |

10. பேச்சுப் போட்டி:

| | |
|---|---|
| மேடையில் அச்சமின்றிப் பேசும் திறமை | 20 மதிப்பெண் |
| ஒலிப்பு முறை | 20 மதிப்பெண் |
| மொழித் தூய்மை | 15 மதிப்பெண் |
| உரைத் தெளிவு | 15 மதிப்பெண் |
| பேச்சின் தொடரோட்டம் (Continuity) | 15 மதிப்பெண் |
| குரல் ஏற்ற இறக்கம் | 15 மதிப்பெண் |

11. கட்டுரைப் போட்டி:

| | |
|---|---|
| கருத்து | 30 மதிப்பெண் |
| மொழி நடை | 20 மதிப்பெண் |
| வெளிப்பாடு | 20 மதிப்பெண் |
| இலக்கணப் பிழையின்மை | 20 மதிப்பெண் |
| கையெழுத்து | 10 மதிப்பெண் |

12. ஒப்புவித்தல் (அனைத்து வகைகளும்):

| | |
|---|---|
| மனப்பாடம் | 25 மதிப்பெண் |
| உச்சரிப்பு | 25 மதிப்பெண் |
| குரல் வெளிப்பாட்டின் ஆளுமை | 25 மதிப்பெண் |
| வெளிப்பாட்டின் நயம் | 25 மதிப்பெண் |

குறிப்பு: இசையோடு பாட வேண்டும் என்பது அவசியம் இல்லை. கவிதை, கவிஞர் பற்றி சிறிய அளவில் அறிமுக உரை தேவை.

13. இசை சங்கமம் / இசையரங்கம் (Orchestra) மெல்லிசை

| | |
|---|---|
| சுதி | 25 மதிப்பெண் |
| தாளம் | 25 மதிப்பெண் |
| பாடகர்கள், இசைக்கருவிகள் ஒருங்கமைப்பு | 25 மதிப்பெண் |
| பாட்டின் பொருள் | 25 மதிப்பெண் |

14. குழு நடனம் (அனைத்து வகைக் குழு நடனங்களும்)

| | |
|---|---|
| ஆடுபவர்களின் ஒத்திசைவு | 20 மதிப்பெண் |
| ஒப்பனை மற்றும் உடையலங்காரம் | 20 மதிப்பெண் |
| நடன வெளிப்பாடு | 20 மதிப்பெண் |
| வகைமைக்கு ஏற்ற அடவுகள் | 20 மதிப்பெண் |
| பக்க வாத்தியங்கள் பாரம்பரிய இசைக்கருவிகள் | 20 மதிப்பெண் |

15. நாடகம் (Drama / வீதி நாடகம்)

| | |
|---|---|
| கதைக்கரு | 20 மதிப்பெண் |
| நடிப்பு ஒருங்கிணைப்பு | 20 மதிப்பெண் |
| குரல் எடுப்பு | 20 மதிப்பெண் |
| இயக்கம் | 20 மதிப்பெண் |
| உடல் மொழி | 20 மதிப்பெண் |

16. கோலாட்டம் / களியல் / கட்டைக்குச்சி

| | |
|---|---|
| தாளம் | 25 மதிப்பெண் |
| கோல் கையாளும் விதம் | 25 மதிப்பெண் |
| அடவுகள் | 25 மதிப்பெண் |

| | |
|---|---|
| நடன வெளிப்பாடு (Total Presentation) | 25 மதிப்பெண் |

17. பலகுரல் (Mimicry)

| | |
|---|---|
| கருத்து | 25 மதிப்பெண் |
| போலச் செய்தல் திறன் (Mimicry) | 25 மதிப்பெண் |
| உடல் மொழி | 25 மதிப்பெண் |
| குரல் வளம் | 25 மதிப்பெண் |

குறிப்பு: பிறரைப் புண்படுத்தும்படியாகவே, கேலி செய்வது போலவோ இருத்தல் கூடாது.

18. தனியாள் நடிப்பு: (Mono Act / Miming)

| | |
|---|---|
| கதை | 25 மதிப்பெண் |
| உடல்மொழி | 25 மதிப்பெண் |
| உரையாடும் திறன் | 25 மதிப்பெண் |
| மேடை ஆளுமைத் திறன் | 25 மதிப்பெண் |

குறிப்பு: பிறரைப் புண்படுத்தும்படியாகவே, கேலி செய்வது போலவோ இருத்தல் கூடாது.

19. குழுப் பாடல்கள்:

| | |
|---|---|
| சுதி | 20 மதிப்பெண் |
| தாளம் | 20 மதிப்பெண் |
| அனைவரும் ஒத்திசையாக பாடுதல் | 20 மதிப்பெண் |
| ஒலிப்புமுறை மற்றும் கருத்து | 20 மதிப்பெண் |
| பாவம் (மெய்ப்பாடு) | 20 மதிப்பெண் |

20.கார்ட்டூன்: (கேலிச்சித்திரம்)

| | |
|---|---|
| ஓவியத் திறன் | 25 மதிப்பெண் |
| தலைப்பையொட்டி வரைதல் | 25 மதிப்பெண் |
| பாத்திரப்படைப்பு | 25 மதிப்பெண் |
| நகைச்சுவை உணர்வு | 25 மதிப்பெண் |

21. வண்ணம் தீட்டுதல் (கொடுக்கப்படும் படத்தில்)

| | |
|---|---|
| சீரான வண்ணப்பூச்சு | 25 மதிப்பெண் |
| சுற்றுக் கோட்டிற்கு உள்ளேயே தீட்டுதல் | 25 மதிப்பெண் |

| | |
|---|---|
| பொருள் சார்ந்த வண்ணம் | 25 மதிப்பெண் |
| ஒளியும் நிழலும் | 25 மதிப்பெண் |

22. வரைந்து வண்ணம் தீட்டுதல் (ஏதாவது ஒரு பூ/பறவை/பழம்/காய்கறி)

| | |
|---|---|
| வரைவின் நேர்த்தி | 20 மதிப்பெண் |
| சீரான வண்ணப்பூச்சு | 20 மதிப்பெண் |
| சுற்றுக் கோட்டிற்கு உள்ளேயே தீட்டுதல் | 20 மதிப்பெண் |
| பொருள் சார்ந்த வண்ணம் | 20 மதிப்பெண் |
| ஒளியும் நிழலும் | 20 மதிப்பெண் |

23. மனத்தில் பதிந்த இயற்கைக் காட்சியை வரைதல் (Landscape)

| | |
|---|---|
| தொலைவு அண்மைக் காட்சியமைவு | 25 மதிப்பெண் |
| ஒளியும் நிழலும் (வண்ணத்தில்) | 25 மதிப்பெண் |
| படைப்பாற்றல் | 25 மதிப்பெண் |
| இசைவுப் பொருத்தம் | 25 மதிப்பெண் |

24. தலைப்பையொட்டி வரைதல்

(வாழ்கை அனுபவம் சார்ந்த தலைப்பு ஒன்றிற்கு ஏற்ப வரைதல்)

| | |
|---|---|
| தொலைவு அண்மைக் காட்சியமைவு | 25 மதிப்பெண் |
| ஒளியும் நிழலும் (வண்ணத்தில்) | 25 மதிப்பெண் |
| படைப்பாற்றல் | 25 மதிப்பெண் |
| இசைவுப் பொருத்தம் | 25 மதிப்பெண் |

25. எதிர்கால்க் கனவை வரைதல்

(அறிவியல், கலை, பண்பாடு, பொது வாழ்கை போன்றவை சார்ந்த எதிர்காலச் சிந்தனைகள்)

| | |
|---|---|
| தொலைவு அண்மைக் காட்சியமைவு | 25 மதிப்பெண் |
| ஒளியும் நிழலும் (வண்ணத்தில்) | 25 மதிப்பெண் |
| படைப்பாற்றல் | 25 மதிப்பெண் |
| இசைவுப் பொருத்தம் | 25 மதிப்பெண் |

26. கதை / கவிதை எழுதுதல்

| | |
|---|---|
| கருத்து | 25 மதிப்பெண் |
| நயம் (புதுமை – உத்தி) | 25 மதிப்பெண் |
| மொழி ஆளுமை | 25 மதிப்பெண் |
| இலக்கணப் பிழையின்மை | 25 மதிப்பெண் |

27. காண்கலை வகைகள்

| | |
|---|---|
| படைப்பு / வெளிப்பாடு | 25 மதிப்பெண் |
| புதுமை – உத்தி | 25 மதிப்பெண் |
| இசைவுப் பொருத்தம் | 25 மதிப்பெண் |
| நேர்த்தி (perfection) | 25 மதிப்பெண் |

28 . தனிப் பாடல்கள்

| | |
|---|---|
| சுதி | 25 மதிப்பெண் |
| தாளம் | 25 மதிப்பெண் |
| ஒலிப்புமுறை மற்றும் கருத்து | 25 மதிப்பெண் |
| பாவம் (மெய்ப்பாடு) | 25 மதிப்பெண் |

29. இசை சங்கமம் / இசைக் கச்சேரி / நாத சங்கமம் / பேண்டு வாத்தியம்

| | |
|---|---|
| சுதி | 25 மதிப்பெண் |
| தாளம் | 25 மதிப்பெண் |
| இசைக் கருவிகள் ஒருங்கமைப்பு | 25 மதிப்பெண் |
| நேர்த்தி (ஒழுங்குமுறை) | 25 மதிப்பெண் |

30.நகைச்சுவை வழங்தல்

| | |
|---|---|
| நகைச்சிறப்பு | 25 மதிப்பெண் |
| பாவம் (மெய்ப்பாடு) | 25 மதிப்பெண் |
| நடிப்பு உடல் மொழி | 25 மதிப்பெண் |
| கற்பனை | 25 மதிப்பெண் |

(யாரையும் புண்படுத்துவதாக அமையக்கூடாது)

31. பொம்மலாட்டம்

| | |
|---|---|
| பொம்மைகளின் நேர்த்தி | 25 மதிப்பெண் |
| சொல்லும் கருத்து | 25 மதிப்பெண் |
| தாளம் / பாடல் வளம் | 25 மதிப்பெண் |
| பொம்மை இயக்கத்தின் நேர்த்தி | 25 மதிப்பெண் |

32. கையெழுத்து போட்டி

| | |
|---|---|
| கேட்டெழுதும் திறன் | 25 மதிப்பெண் |
| தெளிவு | 25 மதிப்பெண் |
| எழுத்துகளின் வடிவம் | 25 மதிப்பெண் |
| பிழையின்மை | 25 மதிப்பெண் |

33. புகைப்படம் எடுத்தல் (Photography) / Digital Art

| | |
|---|---|
| புகைப்படத்தின் தெளிவு | 25 மதிப்பெண் |
| புகைப்படத்தின் கருத்து | 25 மதிப்பெண் |
| ஒளி / நிழல் ஒருங்கமைப்பு | 25 மதிப்பெண் |
| இயல்புடைமை (Originality) | 25 மதிப்பெண் |

34. மதிப்பீடு செய்வதற்கான விதிமுறைகள் விளக்கப்படாத கலையினங்கள் எவையேனும் இருப்பின் அவற்றிற்கான மதிப்பீடு முறைகள் இங்கே குறிப்பிட்டுள்ள மதிப்பீட்டு விதிமுறைகளுக்கு ஏற்ப, வடிவமைக்கப்பட்டு மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் முன் அனுமதியினைப் பெறவேண்டும். மேலும், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி மாநில திட்ட இயக்ககத்தின் முன் அனுமதி இன்றி எந்தவொரு மதிப்பீட்டு முறையையும் மாற்றியமைக்க அனுமதி இல்லை.

**Annexure –II**

**வட்டார அளவிலான கலைத் திருவிழா (2023–24)**

**சேர்க்கைப் படிவம்**

| |
|---|
| வட்டாரத்தின் பெயர் _________________ மாவட்டத்தின் பெயர் _________________ |
| கலைத் திருவிழா நடைபெறும் பள்ளியின் பெயர்: ______________________________ |

பள்ளியின் பெயர்: ___________________ UDISE NO: ________________

தலைமை ஆசிரியர் பெயர்: _________________ தொலைபேசி எண்கள்: _______

பொறுப்பாசிரியர் பெயர்: ___________________

பொறுப்பாசிரியர் தொலைபேசி எண்: ________________

| (நிகழ்ச்சி அலுவலகப் பயனுக்கு மட்டும்) | வ.எண். | போட்டியாளர் பெயர் – பெரிய எழுத்தில் (ஒரு மாணவன் பெயர் ஒரு முறை மட்டுமே எழுதப்பட வேண்டும்) | வகுப்பு | ஆண்/ பெண் | போட்டியிடும் கலை வடிவங்களின் குறியெண்கள் | Remarks |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

பங்கெடுக்கும்: ஆண்கள் __________ பெண்கள்__________மொத்தம் ___________

பிரிவு வாரியாக பங்கு பெறுவோர் : பிரிவு 1 _____பிரிவு 2 _____ பிரிவு 3 _____

மொத்தம்:

தொகுப்பு விவரம் இறுதிப் பக்கத்தில் மட்டும் எழுதினால் போதும்

அணித்தலைவர் / பொறுப்பாசிரியர் பெயர் மற்றும் கையொப்பம்:

**உறுதிமொழி**

மேலே கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் யாவும் பள்ளிப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளவாறே உள்ளன எனவும், இவ்விவரங்கள் நான் அறிந்தவரை உண்மையானவை எனவும், இவற்றில் எவ்வித ஒளிவுமறைவு, மாற்றமோ இல்லை எனவும் உறுதியளிக்கிறேன்.

**நாள்:**

**தலைமையாசிரியர் கையொப்பம்**

**இடம்:** **அலுவலக முத்திரை**

# Annexure –III

## கலைத் திருவிழா 2023–24

## மேல் முறையீட்டிற்கான விண்ணப்பம்

| | | | |
|---|---|---|---|
| 1. | பங்கு பெற்ற மாணவர் பெயர் | : | |
| 2. | பள்ளியின் பெயர் | : | |
| 3. | மாவட்டத்தின் பெயர் | : | |
| 4. | பங்குகொண்ட கலை இனம் | : | |
| 5. | அரங்கத்தின் பெயர் மற்றும் எண் | : | |
| 6. | பதிவு எண். | : | |
| 7. | குறியீட்டு எண் (Code No) | : | |
| 8. | போட்டி நடைபெற்ற பள்ளி / கல்வி மாவட்டம் /மாவட்டம் / மாநில நிலை | : | |
| 9. | போட்டியில் பெற்ற நிலை | : | |
| 10. | போட்டி நடைபெற்ற நாள் மற்றும் நேரம் | : | |
| 11. | முடிவுகள் அறிவிக்கப்பட்ட நாள் மற்றும் நேரம் | : | |
| 12. | மேல் முறையீட்டிற்கான காரணம் | : | |
| 13. | போட்டியாளரின் கையொப்பம் | : | |
| 14. | பொறுப்பு ஆசிரியரின் பெயர் மற்றும் கையொப்பம் | : | |
| 15. | மேல் முறையீடு செய்த நாள் மற்றும் நேரம் | : | |

அலுவலகப் பயன்பாட்டிற்கு மட்டும் (For the Office use only)

1. மேல் முறையீட்டு எண் :
2. மேல்முறையீட்டுற்கான தொகை :
3. மேல்முறையீடு பற்றி விரிவாக எடுத்துக் கூறுவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நேரம் :
4. குறிப்புகள் (தீர்ப்பு பற்றி) :

கையொப்பம்

தலைவர் மேல்முறையீட்டு மன்றம்

பள்ளி / வட்டாரம் / மாவட்டம் / மாநிலம்

————————

(ஊர்ப் பெயர்)

## Annexure –IV

## கலைத் திருவிழா 2023–24

## மேல் முறையீட்டு மன்றம் வழங்கும் தீர்ப்பு

பொருள் :

பார்வை :

உத்தரவு எண்: ________ __ நாள்:____________

போட்டியாளர் முன்வைத்த முறையீடு :

மேல்முறையீட்டு மன்றத்தின் கருத்து :

மேல்முறையீட்டின் – தீர்ப்பு :

தலைவர்
மேல்முறையீட்டு மன்றம்
பள்ளி / வட்டாரம் / மாவட்டம் / மாநிலம்
________
(ஊர்ப் பெயர்)

போட்டியாளர் பெயர் மற்றும் முகவரி:

# Annexure V

## கலைத் திருவிழா 2023–24

## (நடுவர் / மேல்முறையீட்டு மன்ற உறுப்பினர்களுக்காக)

**<u>உறுதி மொழி</u>**

தமிழகம் பள்ளிக் கலைத் திருவிழா 2023–24ல் – என் மகன், மகள், என் மாணவர் என் உறவினர் என யாரும் நான் நடுவராக / மேல்முறையீட்டு மன்ற உறுப்பினராக இருக்கும் கலை நிகழ்ச்சியில் / மேல்முறையீட்டின் விசாரணையில் இடம் பெறவில்லை என உறுதியாகக் கூறுகிறேன்.

**நாள்:** **கையொப்பம்:**

**இடம் :** **பெயர்:**

**குறிப்பு:** தேவையற்ற தொடரைக் கோடிட்டு நீக்குக.